ஸம்புடம் 2. பரீதாபி௵ தைமீ ஸஞ்சிகை 12

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை பத்ரிகை.

ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபையின் காரியதரிசியால்,

ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும்.

கலாரத்நாகரம் அச்சாபீஸ், சென்னை.

வருஷம் 1-க்கு கட்டணம் ரூ. 2-0-0.] [ஒரு ஸஞ்சிகையின் விலை அணா 3.

# THE VEDANTA DIPIKA.

## A MONTHLY TAMIL JOURNAL

OF

## HINDU RELIGION AND PHILOSOPHY.

PUBLISHED BY THE GENERAL SECRETARY,

THE AHOBILA MUTT SISHYA SABHA.

---

Vol. 2—No. 12.

---

January 1913.

---

## வேதாந்த தீபிகை

---

பரீதாபி௵ தை௴.

---

## விஷய ஸூசிகை.

பக்கம்.

1. மதுராந்தக மஹாஸங்கத்தின் அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம் (தொடர்ச்சி) ... ... 471.
2. ஷை மஹாஸங்கத்தில் ஸ்ரீ. உப. வாஸுதேவாசாரியரின் உபந்யாஸம் ... ... ... ... 485.
3. ஸ்ரீ சதுச்ச்லோகீ விவரணம் விஷ்ணுதாஸன் ... ... ... ... 506.
4. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... 511.

*Copy-right reserved.*

423

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] பரீதாபி௵ தைமீ [ஸஞ்சிகை 12.

## அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம்.

(தொடர்ச்சி.)

### கலாபேதத்தால் வளரும் வைஷம்யங்கள்.

பகவத்ராமானுஜ ஸித்தாந்தாபிமானிகளெனப்பெயர் வஹித்த தக்ஷிணோத்தர கலா நிஷ்டர்களுக்குள் பஹுகாலமாய் அந்யத்ராத்ருஷ்டமான ஒரு வைஷம்யத்தைக் காண்கிறோம். இது யதீந்த்ரன் மதத்துக்கு மிகவும் ஹாநிகரம். அந்யமதஸ்தர்களுடைய பரிஹாஸத்துக்கும் இது ஓர் லக்ஷ்யமாயிருக்கிறது. இந்தக்கலாவைஷம்யம் ப்ரதமத்தில் ஆசார்ய பரம்பராபேதத்தில் அங்குரிதம். அநிவார்யமான அபிப்ராயபேதங்கள் காலக்ரமத்தில் ஜநிக்க, இந்த பேதங்களையே ப்ரதானமாய் ஆதரித்தவர்கள் ஏக ஸம்ப்ரதாயத்துக்கு ஸம்ப்ரதாயத்வித்வத்தை உண்டுபண்ணி விட்டார்கள். இதனுடைய ஆதுநிக விஸ்தாரங்கள் இவ்விடத்தில் விவரிக்க வேண்டியதில்லை.

"𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑍍𑌯𑌪𑌿 𑌹𑌿 𑌤𑌾𑌨𑌿 𑌦𑍍𑌵𑍇𑌷𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌂𑌤𑌿 𑌵𑍇𑌦𑌤𑌃 ।
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌹𑌾𑌽𑌤𑌿𑌗𑌾𑌹𑌨 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑍀𑌤𑌿 𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌾 ॥"

என்கிறபடியே இந்த கலா ப்ரயுக்தமான த்வேஷங்கள் அந்தந்த கலாநிஷ்டர்களான ஜ்ஞாத்ர்க்களினால் மிகவும் சோகிக்கத்தக்கவை. "𑌸𑌨𑍍𑌤𑌸𑍍𑌸𑍍𑌵𑍀𑌯𑌾𑌨𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌨𑍀 𑌵𑌿𑌜𑌹𑌾𑌤𑍁𑌸𑍍𑌸𑍍𑌪𑍃𑌹𑌯𑌾" என்னும் ப்ரார்த்தனையும் வீணாக்கப்பட்டதன்றோ? தத்காலஸ்திதியில் இதற்குப் பரிஹாரம் சொல்ல அடியேனுக்குச் சக்தியில்லை. இதைக்குறித்து ஆஸ்திகர்கள் எல்லாரும் யோசிக்கவேணும்.

## ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயத்தின் தத்காலக் குறைவுகள்.

ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஸங்க்யையானது சென்ற ஐம்பது வர்ஷத்துக்குள் மிகவும் குறைவை யடைந்திருக்கிறதென்று யாவர்க்கும் தெரிந்தவிஷயம். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திவ்ய நியமநத்தினால் இந்த ஸம்ப்ரதாயத்தை ஸகலதேசங்களிலும் பரவச்செய்ய வேண்டிய நம்முடையஸ்வாமிகள் ஸஞ்சாரமென்பதை அடியோடு விட்டுவிட்டார்கள். நமக்குள் வயோதிகர்களுக்கும் தெரிந்தவரையில் ஒரு ஸ்வாமியாவது நமக்குக் குலதெய்வம் திருக்கோயில் கொண்டருளிய ஸ்ரீ மதஹோபிலத்தை மிதித்தாரில்லை. ஸ்வாமிகளுடைய ஸஞ்சாரமாத்திரமே ஸம்ப்ரதாயத்துக்கு யோகக்ஷேமாவஹமன்று. ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யாதிகளில் ஸ்ரீ ஸந்நிதியி லெழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளுக்குக் கொஞ்சமேனும் க்யாதிலோபம் வரக்கூடாது. க்ரந்த காலக்ஷேபாதிகளும் ஸ்ரீந்ருஸிம்ஹாராதனமும், ததீயா ராதனமும் ஸ்ரீ ஸந்நிதிக்கு ஏற்பட்டஅங்கங்கள். இவைகளிலும் க்யாதிலோபம் ஸர்வதா பரிஹரணீயம். இந்த அம்சங்கள் யதாவத்தாய் நிலைக்கும்படியாக ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்கள் எப்பொழுதும் யதாசக்தி ப்ரயத்ந ஸஹிதர்களாயிருப்பது நலம். ஸ்ரீ ஸந்நிதிக்கு ஏற்பட்டகுறைவுகளைத் தெரிந்துகொண்டு அவையுண்டான காரணங்களை ஆராய்ந்து அவைகள் மறுபடியும் உண்டாகாம லிருக்கத்தக்க

யோசனைகளையும், ப்ரயத்னங்களையும் செய்யவேண்டும். இது விஷயங்களில் ஸ்ரீ அழகிய சிங்கருடைய அபிப்ராயம் நமதை யொத்திருந்தபோதிலும் நமது ஸம்ப்ரதாயம் தழைத்தோங்க வேண்டுமென்றால் காலதேச வைகுண்யங்களை யபேக்ஷித்து, ஸ்ரீ அழகிய சிங்கருடைய ப்ரயத்நமாத்ரத்தினாலே அது ஸித்திக்க மாட்டாதாகையால், ஸம்ப்ரதாய நிஷ்டர்களாயும், ஜ்ஞாதாக்களாயுமிருக்கும் ஸ்வாமிகளைக்கொண்டு முக்யமான திவ்யதேசங்கள் தோறும் காலக்ஷேபாதிகள் மூலமாயும், உபந்யாஸங்கள் மூலமாயும் ஸம்ப்ரதாயத்தைப் பரவச்செய்வது ஸ்ரீ அழகிய சிங்கருக்கும் இந்தஸபையாருக்கும் பொருந்தியகடமை. பரஸ்பரவிரோதிகளாயும், ஏகஸம்ஸ்ரயம் துர்லபமாயுமுள்ள ஸ்ரீஸரஸ்வதிகளுக்கு லோகக்ஷேமார்த்தமாய் ஸத்துக்களிடம் ஸங்கதம் உண்டாகவேண்டியிருப்பதால் ததர்த்தம் த்ரவ்யார்ஜநம் செய்யக்கூடுமாகில் அதை இந்த ஸபையார் செய்யத் தக்கவர்கள். நமது ஸம்ப்ரதாயம் நிலைக்க வேண்டுமாகில் அதில் விச்வாஸமுள்ள ஜ்ஞாதாக்கள் அவச்யம் ஆதரிக்கத் தக்கவர்கள். பெரும்பாலும் நம்மவர்கள் எல்லோரும் தமது சிறுவரை ராஜபாஷையைக் கற்பிக்கும் வித்யாசாலைகளுக்கு அனுப்பி விடுகிறபடியால் ஸம்ப்ரதாய விஷயத்தில் வித்யார்த்திகள் ஏற்படுவது அரிது. அதற்காக வித்யார்த்திகள் போஷண விஷயமாயும் த்ரவ்ய ஸம்பாதநம் உசிதம். ஸ்ரீ ஸந்நிதிக்குரிய ஒவ்வொரு மடத்திலும் இந்த ஏற்பாடுகள் நிலைக்கும் வரையில் ஸபையாருடைய ப்ரயத்நத்துக்கு விராமம் வருவது நன்றன்று.

"[illegible]
[illegible]
[illegible] ।"

என்னும் வண்ணம், பரமபுருஷனுடைய ஸ்வரூப ரூப குணவிபூதிகளில் அத்யந்தம் ஈடுபட்ட நம்முடைய ஆசார்யர்கள்முகமாய் நமக்கு ப்ராப்தமான ஸத்ஸம்ப்ரதாயத்தை ஆதரத்துடன் நாம் ரக்ஷிக்கவேண்டு மாகையால் அதற்காக நமக்குள் ஐகமத்யமும், பரஸ்பரவிச்வாஸமும் தலைக்கட்டிநிற்குமென நம்புகிறேன். இந்த

நிலைமை ஸம்ப்ரதாய வ்ருத்தியின் பொருட்டு ஏற்பட்ட ஸபையை நாம் குறைவின்றிக் காப்பாற்றினாலல்லது ஸ்திரப்படாது. ஸபையைச் சேரக்கூடிய ஸம்ப்ரதாயஸ்தர்கள் அனைவரும் அதில் சேருவதுடன் அதற்கு உத்தேச்யமான வ்யாபாரங்களைச் சரிவர நடத்த த்ரவ்யஸஹாயமும் செய்யக்கடமைப் பட்டிருக்கிறார்கள். இப்போது இந்தஸபை ஏற்படாவிட்டால் ஸம்ப்ரதாயம் நாமமாத்ராவசேஷம் ஆகுமென்பதில் அடியேனுக்கு ஸந்தேகம் ஜநிக்கவில்லை.

### ஸம்ப்ரதாய ஸபையார் செய்யவேண்டியது.

ஸ்ரீ அழகிய சிங்கர் கிருபைபண்ணாமல், ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸம்பத்து ததனுக்ரஹ ஜந்யமான ஸம்ப்ரதாயக்ஷேமத்திற்கு உபயோகப் படாமல் போய்விட்டாலும் ஸம்ப்ரதாயாபிமானிகள் செய்யக்கூடிய கார்யம் பல உண்டு. அவற்றைப்பற்றி பூர்வமே விஜ்ஞாபநம் பண்ணிக்கொண்டேன். "दैवेन देयमिति कापुरुषा वदन्ति". எல்லாம் பகவத் ஸங்கல்பத்தினால் ஆகவேண்டுமென்று உத்யோக ஹீநர்களாயிருப்பது புருஷத்தன்மைக்கு ஒவ்வாது. ப்ரயத்நம் நம்முடையது. பலம் ஈச்வராதீனம். "कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन" என்று அவனே காட்டியிருக்கிறான். பலம் ஸித்திக்காத தசையிலும் "न हि कल्याणकृत्कश्चिद्दुर्गतिं तात गच्छति" என்னும் பகவத்வாக்யம் ஸ்மரிக்கத்தக்கது. ஈஸ்வரப்ரத்யக்ஷம் கலியுகத்தில் துர்லபம்.

"[illegible]
[illegible]"

என்பது ஸ்ரீபாகவதவசனம். ஆதலால் பகவத் கைங்கர்ய ரூபமாகச் செய்யப்பட்ட ஸத்ப்ரவ்ருத்திகளுக்கு பலம் கைகூடாததைக் கொண்டு பகவதானுகூல்யமில்லை என ஊஹித்தல் யுக்தமன்று. பலம் உண்டாக ப்ரதிபந்தங்கள் பலவாறாக இருக்கலாம். கலியில் பகவான் பெரும்பாலும் ஆவிர்ப்பவிப்பதில்லை.

" வித்3ராவணீ விஷயவைரிவரூதி2நீநாம்
ஸத்3வாஸநேந ஸமிவாரவிபுள ஸ்ப்ருயந்தா |
உத்கண்ட்2யக்ருதே பா4க்3யஜநேநஸம்ப4வதி ஹந்த
ஸம்பா ஹரேஸ்ஸஹஜநிஷ்ட்2 யதா3த்வநேதி ||" என்றும்,

" வேதா3ந்ததே3ஶிகபதே3 விநிவேஶ்ய பா3லம்
தே3வோ த3யாஶதகமேதத3வாத3யந்மாம் ||"

என்றும் ஸ்ரீமத்வேதாந்ததேசிகன் திருவுள்ளம்பற்றி யிருப்பதினாலும், அந்த பரமாசார்யன் திருவேங்கடமுடையான் தீர்த்ததினமே அவதரித்தபடியாலும், அந்த மஹாதேசிகன் திருக்குமாரர்,

" வேங்கடேஶாவதாரோऽயம் தத்3க4ண்டாம்ஶோऽத2வா ப4வேத் "

என்று ஸாதித்திருக்கிறபடியினாலும்,

" ஸ்வாமீகரஸப்ரயமேம்த்ரஸிவராதா வாபி ஸம்காவ ரா தா3வாநாத்ரநவிஸாநுப்ரணஸ்ய ஸிரஸா யாவாஜிவாவாऽந யீ | தத்தாத்ரக் கவிதாஸதகரூஸரணளதம்த்ரு தயாஜே ஶ்ரூதே: த்ருஷ்ட:கிம்ஸத்ருமாமஜாஙமரணா தய்யம்ஶவே கய்யதாம் ||"

என்றும்,

" கவரிஷிதஸம்ப்ரதாயே
ரவிஜித யதிராஜ ஸூக்திதாத்வயே: |
கஶஜிதகத்ருஷிமவேபூ
ரஙஜஜநெத்ரநாமஜாஙாயே: ||"

என்றும் மஹாப்ராஜ்ஞர்கள் வசநமிருக்கிறபடியே, அங்யத்ராத்ருஷ்டமான அசிந்த்ய' மஹிமையை யோசித்தும், ஒருவிசேஷமான பகவதம்ஶாவிர்ப்பாவத்தை நிகமாந்த மஹாதேசிகன் பக்கல் ஊஹிக்கக்கூடுமோனாலும், கேவலம் கதைகளை நம்பியே ஸ்ரீபகவான் மனுஷ்யலோகத்தில் ஸ்வஸாந்நித்யத்தை ஆவிஷ்கரணம்

பண்ணுகிருனென்று இந்த யுகத்தில் யோசிக்க இடமில்லை. அதற்கு அத்யந்தம் நிதர்சநமாக நம்முடைய தேசத்தில் சென்ற ஆயிரம் வருஷத்தினுடைய சரித்திரமேபோதும். அந்யதேசங்களுடைய சரித்திரத்தினுலும் இதை நன்ருக அறிந்து கொள்ளலாம். நிரபராதிகளா யிருக்கிறவர்கள் அபூர்வமான ஹிம்ஸைக்கு லக்ஷ்யமாக விருந்தும் இருந்துகொண்டு மிருக்கிருர்கள். பரம ஸாதுக்கள் ப்ரஹ்மஹத்யாதிகளுக்கும் விஷயமாகின்றுர்கள். ஸ்வஸத்தையால் மாத்ரம் அபராதிகளாகிறவர்கள் பலர். ஆத்யாத்மிகமாகவும், ஆதிபௌதிகமாகவும், ஆதிதைவிகமாகவும், மனுஷ்யர்களுக்கு உண்டாகும் கஷ்டங்களை எண்ணிமுடியாது. எவ்வளவுதான் கதறினுலும் சரண்யன்வந்து ரக்ஷிப்பதில்லை. தர்மம் தலைகாக்கவில்லை. ஸத்யம் ரக்ஷிக்கவில்லை. எவ்வெவ்விதத்தினுலும் எல்லாமனுஷ்யர்களும் அர்த்தார்ஜன பரர்களாகவே நிற்கின்றனர். நிகமாந்த மஹாதேசிகன் திருவுள்ளத்தில் காஷாய தண்டமாத்ர சரணர்களான கலியுகஸந்யாஸிகளின் நைரபேக்ஷ்யத்தைப் பற்றி.,

“ 𑌵𑌿𑌕𑍍𑌷𑍇𑌤𑌿 𑌶𑌿𑌷𑍍𑌯𑌜𑌨𑌰𑌕𑍍𑌷𑌣 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌤𑌿
𑌶𑌾𑌟𑍀𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌬𑍋𑌧𑌵𑌯𑌿 𑌕𑌲𑍍𑌪𑌨𑍇𑌤𑌿 ।
𑌦𑌂𑌡𑍋𑌽𑌵𑌸𑌂𑌭𑍍𑌰𑌮𑌣𑌕𑍍𑌷𑌮𑌤𑍀𑌤𑌿 𑌭𑌾𑌵𑌾𑌣𑌾𑌃
𑌸𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑍋𑌽𑌪𑌿 𑌦𑌯𑌤𑍇 𑌸𑌤𑌤𑌂 𑌯𑌤𑌾𑌯𑌾𑌂 ॥ ”

என்று துஷ்டஸந்யாஸ தூஷணப்ரகரணத்தில் ஸ்மரிக்க நேரிட்டதை யோசித்தால், “𑌸𑌵𑍇 𑌜𑌨𑌾𑌃 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑌿” என்பது மிகவும் இக்காலத்தில் பொய்யாகாது. ஒருவன் ஆர்ஜ்ஜனசீலனுகப் பலர் ரிக்தராதல் ஸாதாரணம். இத்தன்மைய லோகத்தில் நாம் பகவத் ப்ரஸாதத்தை யுத்தேசித்துச் செய்யுங் கர்மங்களுக்கு அவனது அப்யுபகமரூபமாகத் தெரியவேண்டிய பலங்களை ப்ரதீக்ஷிக்க அர்ஹர்களன்று. கர்மாநுகுணமாக ப்ரஜைகள் பலாநுபவ மடைகின்ருர்கள் என்பது ப்ரமாணஸித்தம். ஆனுலும் அந்தவிஷயம் போக்தாக்களுடைய புத்திகோசரமாக வெளியாகிறதில்லை.

## பகவத் ஸந்நிதிகளில் துராசாரங்கள்.

ப்ரஸக்தாநு ப்ரஸக்தமாயிங்கு யோசிக்கதக்கது ஒன்றுண்டு. வேதாந்ததீபிகையில் சிலமாஸங்களுக்கு முன் பகவத் ஸந்நிதிகளின் கைங்கர்யங்களில் அந்வயித்தவர்களுடைய துராசாரங்களினுல் பிம்பங்களில் பகவத் ஸாந்நித்யத்திற்கு ஹாநிஸம்பவிக்குமோ என்னும் அம்சத்தைப்பற்றிச் சில கடிதங்கள் எழுதப்பட்டன. இதுவிஷயமாய் பாத்மஸம்ஹிதையில் சர்யாபாதத்தில் நித்யாராதன ப்ராயஸ்சித்தாத்யாயமான பதினெட்டாவது அத்யாயத்தில்,

“ஸ்நாநபஞ்சேந தேவம் ஸ்நாபயேச்ச குஶவாரிபி: ।
மூலமந்த்ரஜபஸ்ஸ்வோக்தோ நிஷ்க்ருத்யா தஸ்ய கர்மண: ॥

வஸ்த்ரம் ரஜஸ்வலாயாஸ்து ஸ்ப்ருஷ்ட்வா தேவார்ப்பணே க்ருதே ।
பஞ்சகவ்யை: ஸ்நாபயித்வா பஞ்சோபநிஷதாம் ஜப: ॥

ஶ்வாநம் ரஜஸ்வலாம் ஶூத்ரம் சண்டாலம் பதிதக்ரியம் ।
ஸூதிஞ்ச பித்ருஹரிஷ்டம் ப்ரக்ஷம் ஸ்ப்ருஷ்ட்வா ததர்ப்பணே ॥

பஞ்சவாருணமந்த்ரைஸ்து ஸ்நாபயேச்ச குஶவாரிணா ।
காகபாஷ்ணபதிதே ப்ரதிமோம பராதிகாத் ।
ஸ்பர்ஶ்யம் ந்ருஷபேயம் ஸ்ப்ருஷ்ட்வா ப்ராயஶ்சித்தக்ரியா ॥

கேஶாதிதோஷதுஷ்டேந புஷ்பேணாராதநே க்ருதே ।
க்ஷீரேண ஸ்நபநம் க்ருத்வா ஶாந்திஹோம: ப்ரதிக்ரியா ॥

என்றும்—

மஹாபாதகிஸம்ஸ்பர்ஶே ஸ்நபநஞ்சோத்தமோத்தமம் ।
உபபாதகிஸம்ஸ்ப்ருஷ்டே ஸ்நபநம் மத்யமோத்தமம் ॥

பரஸ்த்ரீமதநாஸக்தைஸ்த்யக்தாநியதவ்ரதிபி: ।
ஸ்ப்ருஷ்டே ச நவபி: கும்பை: ஸ்நபநம் கலஶைர்பவேத் ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

என்றும், இவ்விதமான வசநங்கள் ஸ்மரிக்கத்தக்கன. திவ்யமங்கள விக்ரஹங்களில் ஸாந்நித்யத்தைக் குறைக்கும் ஸாமக்ரிகள் மேலே விவரித்தவண்ணமும் வேறு ப்ரகாரமாகவும் ஸம்பவித்திருக்க, தத் ஸாமக்ரீயுக்தர்களாக ப்ரத்யக்ஷத்தில் தோற்றுகிற திவ்யதேச கிங்கரர்களை தர்சித்துக்கொண்டும், அபராத ஸஹஸ்ரம் ப்ரதிதினம் ஸம்பாவிதமாயிருக்க, தத்பரிஹாரார்த்தமாக விதிக்கப்பட்ட நிஷ்க்ரியைகளைச் செய்யாமலிருப்பதை நிரீக்ஷித்துக்கொண்டும், திவ்ய தேசங்களை யதாபூர்வம் ப்ரஸாத ஸ்வீகார பர்யந்தமாக அங்கீகரித்தல்கூடுமோ என்னும் விஷயத்தில் பண்டிதர்கள் விமர்சிக்கத்தக்கவர்கள்.

“ [illegible] ”
என்றும், “ [illegible] ” என்றும் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் பாகவதவாஸமாகிற ஔசித்யத்தை திருவுள்ளம்பற்றியதும் அநுஸந்திக்கத்தக்கது. க்ருத க்ருத்யனுக்கு யோக்யமான வாஸஸ்தாந விசேஷசிந்தையில்—

“ [illegible]
[illegible] ।
[illegible] ॥ ”

என்று ஆசார்யன் ஸாதித்தபடியன்றோ? சரணாகதி கத்யத்தில் ஸ்ரீ பாஷ்யக்காரர் "அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்ஸ்வ" என்று திவ்ய தேசவாஸத்தை ப்ரபந்நனுக்கு விதித்திருக்கவும், துருஷ்கர்களினால் ஸ்ரீரங்காதி திவ்யதேசங்களுக்கு ஸம்பவித்த விபரீதங்களைக் கண்ணுற்ற ஸ்ரீநிகமாந்த தேசிகன் தந்நிவாரணார்த்தமாய் அருளிச் செய்த அபீதிஸ்தவத்தில்,

"ஸமாவிலவி ரங்கஹர்ம்யாவலிஷு யத்ர தைத்ய வஸீ
ஸமேக்ஷநிய சாஸ்ய ஹ்ருத் ஸ்வந்திதோ வதந்தே ।
ததக்ஷ தபோவநம் தவ ராஜயாநீஷிரா"

என்று ஸாதித்ததை யோசித்தால் பரமைகாந்திகள் வாஸம்பண்ணுகிற காரணத்தினாலேயே திவ்யதேசங்களில் பகவான் ஸாந்நித்யம் பண்ணுகிறானென்று ஏற்படுகிறது. முன்வாஸம் பண்ணினகாரணத்தாலன்றோ இப்போது தததபாவத்திலும் ஸாந்நித்யம் அநுபிக்கத்தக்கது. "நிவஸந்தி ஹி யத்ராமீ யத்ர யத்ர ச வைஷ்ணவா: । தத்ர தத்ர ஹரிஸ்ஸாக்ஷாத் ஸந்நிதத்தே ஸ்வயம் ததா ॥" என்னும் ச்லோகார்த்தத்தையும் இங்கே ஸ்மரிக்கவேண்டும். ஸாந்நித்ய விரோதங்கள் மாத்ரம் வ்ருத்தியாகிநின்றால் திவ்யதேசங்களின் கதியென்ன? சென்ற ஸம்வத்ஸரத்தில் பெருமாள் கோவிலில் தர்மபரிபாலகர்கள் அர்ச்சகர்களை நிவர்த்தித்த காரணத்தால் உண்டான விபரீதங்களையும், தந்நிமித்தமாக நம்முடைய ஸம்ப்ரதாயஸ்தர்களில் பண்டிதபாமரர்களுள்படப் பெரும்பான்மையோர் ஸந்நிதியினின்று ஒருப்ரகாரமாய் விலகிநின்றதையும் இங்கு ஆலோசிக்கக்கூடியதே.

ஆனால் ஸ்ரீசைலம் முதலான திவ்யதேசங்களில் பகவத்ஸாந்நித்ய நிதர்சநமாக அநேக அநுபவங்கள் ச்ருதிகோசரமாயில்லையா என்றால், இந்த அநுபவங்களனைத்தும், ஆர்த்தர்களும் அர்த்தார்த்திகளும் செய்துகொண்ட ப்ரார்த்தனைகளில் விஸ்மரணம் நேரிட்டகாலங்களில், சிலரிடம் பகவான் அநுப்ரவேசம்பண்ணி நிறைவேராத ப்ரார்த்தநாம்சங்களை நிறைவேற்றுவித்தலில் முடிவுபெறும். துஷ்டநிக்ரஹ ரூபமாயும், சிஷ்டரக்ஷண ரூபமாயும் தர்ம பரிபாலநார்த்தமாகவும் உண்டான பகவதநுப்ரவேசத்தை

எங்கும் இக்காலங்களில் காணேம். நாம் தெரிந்துக்கொண்ட அநுபவங்கள் தேவஸ்வாபஹாரம் செய்வோரை தத்வ்யாபாரங்களிலிருந்து தடுத்ததாகக் கண்டதில்லை. ஆகையால் திவ்யதேசங்களில் ஸம்பவித்திருக்கும் தோஷங்களை யதாசக்தி நிவர்த்திக்க ப்ரவ்ருத்திப்பதைவிட்டு ததங்கீகார ஸஹிதர்களாய், அங்கே நிரந்தரம் வஸிக்கும் அபராதிகளுடைய ஸம்ஸர்க்கத்தையும் அடையப்பெற்றால் அதனடியாக முமுக்ஷுவுக்கு அநுகூலமே வருமென்று சொல்ல அடியேன் துணியமாட்டேன்.

## பலாபேக்ஷை நிவர்த்திக்கவேண்டியது.

ப்ரக்ருதஸ்திதியில் நாம் கேவலம் சாஸ்த்ரைக சரணர்களாய் நிற்கிறோம். சாஸ்த்ரமென்பதில் ஆசார்யர்கள் நமக்கு அநுக்ரஹபூர்வமாய்கொடுத்த க்ரந்தங்களும் சேர்கின்றன. இவைகாட்டின வழியே நாம் பகவானிடம் ஏகாந்தமநஸ்கராயிருந்து கொண்டு ததநுகூல ப்ரவ்ருத்திகளில் ரதர்களாய் வர்த்திக்கக் கடவோம். இப்படி நாமிருந்தால் நமது ப்ரயத்நங்களைக்குறித்து பலாபேக்ஷை நமக்கு உண்டாக வேண்டியதில்லை.

“ த்வதாராதநஸித்த்யர்த்தம் ஜ்ஞாநாஹ்ருதம் ஸம்ஶாந்தாத்மா ந ।
நயாமி த்வத்ப்ரஸாதைகவிஷயாவஸாநம் நாஸ்ம்ருதி ப்ரவ ॥ ”

என்கிறபடியே அவனுடைய கைங்கர்ய புத்தியினலேயே ப்ரவ்ருத்திப்பவர்களுக்கு அந்த ப்ரவ்ருத்தியே பலமாகிறது பின்னுமோர் பலத்தை அவர் எதிர்பார்த்தல்கூடாது இந்தயுகத்தில் அப்படிப்பட்ட பலம் கிட்டாமல் போவது ஸம்பாவித மாகையால் “யாவநாந்ஸ்ம்ருதி ப்ராவ.” என்னும் வசனம் ஸ்மரிக்கவேண்டியதாகிறது.

## ஸர்வபூதஹிதத்தில் ரதி.

ஈஸ்வரபயமும், லோகஸங்க்ரஹமுந்தான் அஸத்ப்ரவ்ருத்திகளைத் தடுக்கக்கூடியவை. லோகஸங்க்ரஹத்தைக் கருதியே எல்லோரும் கர்ஹித கார்யங்களை விட்டிருக்க மாட்டார்கள். ஈஸ்வரபயம் நாஸ்திகர்களுக்கில்லை. ஒருவன் நாஸ்திகனே அன்றே என்பது அவனது கர்மங்களினல் ஸுலபமாக ஊஹிக்கக் கூடியது. ஈஸ்வர பயத்தால் அஸாதுகர்மங்களை விடுகிறவன் மாந்யனே. ஆகிலும் அவன் உத்தமாதிகாரியாக மாட்டான்.

“ 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯 𑌅𑌹𑌮𑍇𑌵𑌂𑌵𑌿𑌧𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥ ”

என்று பகவத்வாக்யமிருக்கிற படியால், பக்தனன்றோ பகவதநுகூல ப்ரவ்ருத்திகளில் புகுந்து உத்தமாதிகாரியாகிறான். பகவான் பக்திக்கே ஸுலபன் என்பதற்கு

“ 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌧𑌨𑌾𑌭𑌿𑌜𑌨 𑌰𑍂𑌪 𑌤𑌪𑌃𑌶𑍍𑌰𑍁𑌤𑍌𑌜-
𑌸𑍍𑌤𑍇𑌜𑌃𑌪𑍍𑌰𑌭𑌾𑌵 𑌬𑌲 𑌪𑍌𑌰𑍁𑌷 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌾𑌃 ।
𑌨𑌾𑌰𑌾𑌧𑌨𑌾𑌯 𑌹𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌪𑍁𑌂𑌸𑌃
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍁𑌤𑍋𑌷 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌗𑌜𑌯𑍂𑌥𑌪𑌾𑌯 ॥ ”

என்னும் ஸ்ரீ பாகவதவசனம் ப்ரமாணம். ஈஶ்வரபக்தியுண்டாகில் அது நம்மைத் தானே ஸாதுப்ரவ்ருத்தியில் ஏவிவிடும். ஈஶ்வரன் நமக்கு மிக்க விச்வஸநீயனாகில் ததர்த்தமே பதி பார்யா புத்ராதிகளும் ஸர்வபூதங்களும் ப்ரியமாகின்றன. “ 𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌪𑌤𑍍𑌯𑍁𑌃 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌪𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌆𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌪𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿 ” என்று ஆரம்பித்து “ 𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌆𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿 ” என்று உபநிஷத்து முடிக்கிறது. அத்யாத்ம சாஸ்த்ரத்தின் அஸக்ருத்விமர்சத்தினால் இந்த ஜ்ஞாநம் நமக்கு உண்டாகவேண்டியிருக்கிறது. இதிஹாஸ புராணங்களில் உத்தமாதிகாரிகளுடைய கதாபரிசயமும் நமக்கு இவ்விதமான ஏற்றங்களை விளைவிக்கும். அதெப்படியெனில், ஸர்வவிதமான விஷயேச்சையும் நமக்கு ஸ்வரூபவிருத்தம். ஆகிலும்.

“ 𑌯𑌦𑌿 𑌦𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌮𑍇 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌵𑌰𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑌰𑌦𑌰𑍍𑌷𑌭 !
𑌕𑌾𑌮𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑍍𑌯𑌸𑌂𑌰𑍋𑌹𑌂 𑌭𑌵𑌤𑌸𑍍𑌤𑍁 𑌵𑍃𑌣𑍇 𑌵𑌰𑌮𑍍 ॥ ”

என்று ஸர்வவரப்ரதனாய் பகவான் ப்ரத்யக்ஷமாய் நிற்குங்கால் வரங்கேட்பது எங்கேயாயினும் கேட்டதுண்டோ? முக்திப்ரதன் ப்ரஸந்நனாய் முக்தியளிக்க ஸித்தமாய்நிற்க, ஸாதாரண மனுஷ்யர்களையிட்டுச் சோகயுக்தனாய்,

" ஏவம் ஸ்வகல்பிதம் ஸர்வைர் தேவதாரண்யா
பரேந்த்ராந்த்ய ஜந்துபிராணாய ஶீதலீதம் ।
பஶ்யந்து ஜநம் ஸ்வபாவிப்ர ஸர்வைர்வேத்யம்
ஸம்பந்தி பாரவர பிப்ரஹ்ம் பரிக்ஷிப்ய ॥

கோऽந்யஸ்த்வத்தோऽவிதும் ஶக்தோ ஸமஸ்த ப்ராயாஸ:
உத்தாரணேऽஸ்ய ஸம்ஸார ஸாகரோத்தீர்ண ஹேதா: ।
பரிபோஷ்ய மேவ பஹூநாம் ஸத்ருதம் ஸம்ப்ரியா
கிம் த்வேந தே வ்ருஜநா நாம் ஸேவதாம் ॥

நைநவோऽபி ஜ ஸர்வ ஜகாரத்ய வேதாரண்யா:
ஸ்வ ஸீயமாய நிஹாரப்ய தஸ்மிந்விந்த: ।
ஶாவ தலேதா விஶ்வேஶ்வரஸ்ய ஜங்க்ரியாமபி
பாயாஸமோபாய ஸர்வமங்கல ஹரேதா விஶ்வேஶாநு ॥ "

என்று ப்ரார்த்திக்க ப்ரஹ்லாதனைத்தவிர மற்றொரு புருஷனைக் கதையின்கண் கேட்டதுண்டோ? ஸர்வஜனங்களுக்கும் முக்தியைத்தராவிட்டால்,

" நைதாந்விஹாய க்ருபணாந்விமுமுக்ஷ ஏக:
நாந்யம் த்வதஸ்ய ஶரணம் ப்ரமதோऽநுபஶ்யே ।"

என்றுரைத்துத் தனக்கும் முக்தியை அவனொருவனன்றோ நிராகரித்தான். இத்தன்மைய அதிகாரி உலகின்கண் நின்றிருந்தாலும், இல்லாவிட்டாலும், அத்தன்மையுடையோன் புத்திக்கெட்டினதே நம்பெரியோர்பெருமை. இப்படிப்பட்ட மஹாபாகவதன் நிஶ்சயித்துரைத்தபடியே ஸர்வபூதஸௌஹார்தம் பகவதாராதனங்களில் முக்யமாகிறபடியால் அந்ததர்சனத்தைக் காட்டிக்கொடுக்கும் ஸர்வபூத ஹிதே ரதியும் நமக்குப் பரமோத்தேசயமாகக் குறையில்லை. இவ்விதமே பகவான் ஆராதிக்கப்பட்டு ப்ரஸந்நனுகில்,

" தஸ்மிந் ப்ரஸந்நே கிமிஹாஸ்த்யலப்யம்
தர்மார்த்தகாமைரலமல்பகாஸ்தே ।" என்கிறபடியே

கேவல தர்மார்த்தகாமங்களை த்யஜித்தவராய்க்கொண்டு,

"ஸ்ரேயஸ்ரு தாச ஸ்ரு ஹூ தமொரார நஜாச
நிஸ்ஸம்ஶயோ முக்திஷ்வ்யவஸாத:"

என நிஸ்சயித்து தானுகக்கிடைக்கப்போகிற முக்தியையும் அபேக்ஷித்தல் கூடா தென்றல்லவோ மஹாபாகவத வசந மிருக்கிறது. ஆதலால்.

"தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:"

என்னும்படி நமக்கு நிருபாதிகமாய்க் கிடைத்த பகவத்தாஸ்யமும், பகவானுடைய நிருபாதிக ஸ்வாம்யமும், அறிந்தவர்களாய், அவன் ஸர்வஜனங்களுக்குள்ளும் அந்தராத்மாவா யிருக்கிறபடியால் அவர்களிடம் நாம்செய்யும் ஹிதப்ரவ்ருத்தியானது அவனுக்கு அபிமதாராதனமாய் இருக்கும் படியையும் உணர்ந்து, அந்த ப்ரவ்ருத்தியானது பஶ்சிமவித்யா பாரங்கதர் எல்லோருக்கும் உத்ஸாஹ ஹேதுவாயிருப் பதையிட்டும், தத்காலம் அந்த ப்ருவ்ருத்தியே தேசத்தின் க்ஷேமத்திற்கு முக்யகாரணமாயிருப்பதினுலும் யாவர்க்கும் யதாசக்தி அதில் புத்தியைச் செலுத்துவது உத்தமம்.

ஸந்நிஹித பந்து போஷணம் அப்படிப்பட்ட ஹிதாசரணமாக ஒப்புக்கொள்ளத் தக்கது. தூர பந்துக்களை இந்த புத்தியினுலாதரித்தால் பகவான் ப்ரீதனுகிறுன். ஸ்வஸமூஹத்தில் ஹிதப்ரவ்ருத்தியுண்டானல் அது பகவானுக்கு இன்னும் ப்ரீதிகரம். அது தேசமெங்கும் பாவியதாகில் அப்படிப்பட்ட ப்ரவ்ருத்தியுடன் கூடிய புருஷன் பகவானுக்கு மேன்மேலும் ப்ரியதமன். ஸர்வபூத ஹிதத்தில் ப்ரவர்த்தித்தவனைப் பற்றியன்றே "வஞ்சி தாஸ்ஸேஷி ந:" என்றும் "ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்" என்றும் பகவான் அறுதியிட்டான். ஆனல் அதற்கு எல்லோரும் அதிகாரிகளாகார்.

அவர்கள் மஹாத்மாக்கள். ஸுதராம் துர்லபர்கள். இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகள் நமக்கு பகவத்ஸம்பந்தம் ஸ்ரீ மதாதிவண் சடகோபமஹாதேசிகன், வேதாந்ததேசிகன், பாஷ்யகாரர் இவர்களடியாக கிடைத்த படியைநினைத்து இப்படியே பக

வத் ஸம்பந்தமடைந்தவரிடமெல்லாம் நமது ஸம்ப்ரதாயாபிரவ்ருத்தியைக் கருதி ஹிதபுத்தி செய்தல் ஸ்வாகாரம். ஸம்ப்ரதாயாபிவ்ருத்தியை உத்தேசித்துச் செய்யும் ஸகல ப்ரயத்நமும் பகவதாராதன ரூபமாய்ப் பரிணமித்து பஹுஜனங்களுக்கு ஐஹிகாமுஷ்மிகங்களில் நன்மையைப் பயக்கும். இந்தரீதியாகவே நம்ஸம்ப்ரதாய ஸபை உண்டானதாய் நம்புகிறேன்.

### நம் ப்ரயத்நங்கள் பகவத் ப்ரீணநங்கள்.

ஆதலால் அதன் விஷயமாய் நாமெல்லோரும் செய்யும் அநுகூல ப்ரயத்னங்கள் பகவத் ப்ரீணநமாகு மென்பதில் ஸந்தேஹமில்லை. இந்த ஸபையும் அதைச் சேர்ந்த ஸ்வாமிகளும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய க்ருபைக்கு மிகவும் பாத்ரர்களாயிருக்கிறார்கள். இவ்விடம் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளைவிட நம்ஸம்ப்ரதாயாபிமானிகளை நாம் எங்கே காணக்கூடும்; இந்த ஸபையைச் சேர்ந்து இந்த ஸங்கத்தை ஆதரிக்க ஸவப்ரயோஜனத்தை மறந்து ஸம்ப்ரதாயாபி வ்ருத்தியைக் கருதியே எழுந்தருளியிருக்கிற ஸ்வாமிகளை விட்டுவிட்டு, மற்ற யாருடன் கூடி ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ பகவத்ராமானுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமராய் வீற்றிருக்கப் போகின்றனர். இவ்வளவும் "ஹாஸ்யாயைவ பவாம் நஶிக்ஷாய" என்னும்வண்ணம் விஜ்ஞாபனம் செய்கிறபடி. இதை ஸ்ரீ அழகிய சிங்கர் நன்றாய்ப் பராமர்சித்தால் திருவுள்ளம் பற்றக் கூடியதாகவே யிருக்கும்.

### உபஸம்ஹாரம்.

அடியேனோ மித்ஜ்ஞன். ஹிதாஹித க்ரம மறியாமல் தேவரீர்களின் நியமநத்தினால் மனதில் தோன்றினதை வாக்கினால் வெளியிட்டேன். இதை க்ஷமையுடன் தேவரீர்கள் கேட்டுக் கொண்டிருந்ததற்கு அடியேன் மிகவும் க்ருதஜ்ஞதையைப் பாராட்டுகிறேன்.

ஶுபமஸ்து.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் சிஷ்யர்களும். *

விச்வஸ்யாதிமயே ஹேதௌ யஸ்யா ஸ்ரீ ஸ்ஸஹ்யா ஸவிச்வயம் ।
விதத்தேऽதிசயம் நாயஸ்தம் ப்ரபத்யே ஶ்ரிய: ஶ்ரியம் ॥

நிரவத்ய: ஸமஸ்தேஷு ஸாக்ஷீ திஷ்டதி ய: ப்ரபு: ।
விசித்ரஶக்தி நிர்த்வந்த்வ: ஸ ஏவ ஶரணம் மம ॥

ஸ்ருஷ்ட்வா விஶ்வம் ப்ரேம்ணாऽநந்தம் ப்ரவிஶ்ய
யோऽஹேது ரூபம் நாம ச வ்யாகரோதி ।
யம் சாஜாநந் விபுதா லோகஸங்க:
க்ஷாந்த்யா நஸ்ஸாந் ஸோऽயமவ்யாத் ந்ருஹரிதா ॥

நிர்வ்யாஜம் ப்ரணத: பிதாமஹமுகம் ப்ராபய்ய
பாரம்பரீம் லோகோஜ்ஜீவநலாலஸாந் முநிமணீந் ஸா
யந்த்ம்ஶு ஶுத்தாந்தந: - பாதாப்ஜம் புருஷோத்தமஸ்ய ந்ருஹ
ரே ராலம்ப்ய மாஸம் ஹ்ருதா ஸதம் பஶ்ய ஹோ ஜநா: ! கிம் வி
தஸ்ய த்ரவ்யம் க்ஷம்யதாம். ॥

ஸதஸ்யேப்ய: ஸத:பதயே ச நம:—

ஸ்வல்ப தினங்களுக்கு முன்னே, இந்தச் சிஷ்யஸபையின் அத்யக்ஷரான ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர், அடியேனைப் பார்

---

* இது, சென்ற மார்கழி மீ 11௳ புதன்கிழமை ஸ்ரீ மதுராந்தகத்தில் நடந்த ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்யஸபையின் மூன்ருவது மஹாஸங்கத்தில் ஸ்ரீ. உ.வே. வாஸுதேவாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

த்து, 'நீ இந்த ஸம்வத்ஸரத்து மஹாஸங்கத்தில், ஸ்ரீமடம் இப்பொழுது இருக்கும் ஸ்திதியைப் பற்றியும், அந்த ஸ்திதிவிஷயமாக மடத்து ஶிஷ்யர்கள் செய்யவேண்டிய ப்ரயத்நத்தைப்பற்றியும் ஓர் உபந்யாஸம் செய்யவேண்டும்' என்று நியமித்தார். அப்பொழுது, அடியேனுடைய மநஸ்ஸில், 'இப்பொழுது ஸ்ரீ மடமோ த்ருப்திகரமான ஸ்திதியில் இல்லை; இதைப்பற்றி அடியேன் ஏதாவது சொன்னால் அது ஹிதாயாநுவ்யாஹ்ருதியாக இருந்தாலும் சிலருக்கு அப்ரியமாக இருக்குமே!' என்கிற பீதி ஜனித்தது. ஆனாலும், அடியேனுக்கு ஸர்வவிதத்தாலும் ஆப்தராக இருக்கும் ஸ்ரீ ஸபாத்யக்ஷரின் நியமநத்தை அதிலங்கநம் செய்வது ஸ்வரூபமன்று என்று எண்ணி, அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டிய வரையில் ஸ்ரீமடத்தின் தத்கால விஷயங்களைப்பற்றி இந்த மஹாஸதஸ்ஸுக்குச் சிலவற்றை மாத்திரம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகிறேன். அதில் ந்யூநாதிரேகங்கள் இருந்தால், அவைகளை, மஹத்தான ஔதார்யத்தையுடைய மஹான்கள் க்ருபையுடன் க்ஷமித்தருளவேணும்.

ப்ரபஞ்சத்தின் ஆஶ்சர்ய வ்யாபாரங்களைச் சற்று ஊன்றிப் பார்த்தால், கணக்கற்ற ஜீவகோடிகள் தங்கள் தங்கள் அபிவ்ருத்தியைமாத்திரமே தேடுவதில் முயற்சி செய்வதையும், மற்றும் எல்லையில்லாத பலர் மாயையால் மறைக்கப்பட்ட ஜ்ஞாநத்தையுடையவர்களாய்த் தமது ஆத்யந்திக ஶ்ரேயஸ்ஸைக் கிஞ்சித்தும் அறியாமல் தாத்காலிக ஆஹ்லாதத்தைக் கொடுக்கக்கூடிய வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்திப்பதையும், மற்றும் பலர் ஜகத்தின் உபகாரத்தையே பெரிதாகக் கருதி ஸம்ஸார தாபத்தில் வருந்தும் பல ஜீவகோடிகளுக்குத் தங்களால் இயன்றமட்டும் தனியாகவும் தம்மைப் போன்ற சிலரோடு ஒன்றுசேர்ந்தும் உபகரிப்பதையும், மற்றும் இம்மாதிரியான பல பல வ்யாபாரங்களில் மற்றும் பலர் ஸதா ப்ரவ்ருத்தித்து நிற்பதையும் நாம் காணலாம். "நஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்." ஏதாவது ஒரு வ்யாபாரத்தைச் செய்துகொண்டே ஒவ்வொருவரும் தமது காலத்தைப் போக்குகிறார். ஆனால், இந்த ப்ரவ்ருத்திகளையெல்லாம் ஸாதுவான ப்ரவ்ருத்திகள் என்று சொல்ல முடியாது. கேவலம் ஆத்மபரர்களாக இருந்துகொண்டு புண்ய பாப விசார மற்றுத் தங்களு

டைய மநஸ்ஸின் த்ருப்தியையே தேடுபவர்கள் ஸாதுக்களாக மாட்டார்களன்றோ? தங்களுடைய க்லேசத்தைக் கவனியாமலே பிறருடைய நன்மையைத் தேடுபவர்கள்தான் நல்லோர்கள். 'ஈச்வரன் ஒருவன் உண்டு' என்று ஒத்துக்கொண்டால், அவனுக்கு, இவர்களுடைய வ்யாபாரங்களே முகோல்லாஸகரங்கள். "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்" என்றன்றோ பகவதவதாரரஹஸ்யத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறது?

இந்த ஸாத்விக ப்ரவ்ருத்தியிலும் இருவகை உண்டு: ப்ரஜைகளின் ஐஹிக ஸுகத்தை அபிவ்ருத்தமாக்கும்பொருட்டு முயல்வது ஒருவகை; ஆமுஷ்மிக ச்ரேயஸ்ஸைத் தேடுவது மற்றொருவகை. ப்ரஜைகளின் ந்யாய்யமான பரிபாலநத்தை உத்தேசித்துத் தங்களுடைய ஸுக துக்கங்களைச் சிறிதேனும் பாராட்டாமல், தனியாகவும் காங்க்ரெஸ் என்று சொல்லப்படும் ஸதஸ்ஸில் ஒன்று சேர்ந்தும் அநேக மஹான்கள் பரிச்ரமப்படுவதையும், ஜநங்களுடைய ஹிதார்த்தமென்று எண்ணி ஸமுத்ரயாநம் ருதுமதீ விவாஹம் முதலிய சில சீர்திருத்தங்களைச் செய்யும்பொருட்டு விசால மநஸ்கர்களான சிலர் ப்ரயத்நப் படுவதையும், அஜ்ஞாநத்தால் அந்தகாரத்திலேயே மூழ்கிக்கிடக்கும் ஜீவகோடிகளுக்குத் தத்வஜ்ஞாநத்தை உண்டுபண்ணும்பொருட்டுச் சில கருணார்த்ர சித்தர்கள் உசிதமான பலவித ஏற்பாடுகளைச் செய்வதையும் நாம் நாலாபக்கங்களிலும் பார்க்கிறோமல்லவா? இவர்கள் எல்லாரும், பரதுக்காஸஹிஷ்ணுக்களாக, 'என்ன செய்தால் அந்தத் துக்கத்தைச் சிறிதேனும் ஆற்றலாம்?' என்கிற ஆவேகத்துடன் ப்ரவ்ருத்தித்தவர்களே. ஆனால், இவர்களுக்குள், ஐஹிக ஸுகத்தை வ்ருத்தி செய்ய யத்தனிக்கும் மஹான்களைவிட, ஆத்மோஜ்ஜீவநத்தைத் தேடுவதில் ப்ரயத்நம் செய்யும் ஆஸ்திகர்களே மிகவுஞ் சிறந்தவர்கள். இந்த ப்ரவ்ருத்தியைத்தான் பகவான் விசேஷித்துத் திருவுள்ளம்பற்றுகிறார். ஆத்மஜ்ஞாந ரூபமாகிய தர்மத்திற்கு க்லாநி வரும்பொழுதெல்லாம், இவ்விதமாக இதர ஜீவன்களை நிமித்தமாகக் கொண்டு தர்மஸம்ஸ்தாபநம் செய்வதல்லாமல், தானே பகவான் அவதரிக்கிறார் என்றும் நாம் கேட்டிருக்கிறோம். "யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத । அப்யுத்தாநமதர்மஸ்ய ததாऽऽத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥"

இப்படி ப்ரஜைகளுக்கு ஆமுஷ்மிக ச்ரேயஸ்ஸை ஸம்பாதிக்க ப்ரயத்நப் படுகிறவர்கள் பலர் உண்டு. நம்முடைய வேதத்தை ஒத்துக்கொள்ளாமல் இதர வேதங்களை அவலம்பித்து அவைகளிற் சொல்லியிருக்கிறபடி தத்வோபதேசம் செய்பவர் பலர்; நம்முடைய வேதத்தை ஒத்துக்கொண்டே அதில் இருக்கும் வாக்யங்களுக்குப் பிந்ந பிந்நங்களாக அர்த்தங்களைச் செய்துகொண்டு அந்த அந்த அர்த்தத்திற்கு இணங்கியபடி தத்வ ஹித புருஷார்த்தங்களை இதரர்களுக்கு விவரிப்பவர் பலர். இவர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் ஸித்தாந்தத்தைப் பிறருக்குப் போதிப்பதில் மிகுந்த ஊக்கத்துடன் வெகு காலமாக உழைத்து வந்தார்கள் என்பதை நாம் அறிவோம். இந்தக் காலத்தில், வேதபாஹ்யமான க்ரைஸ்தவ மதத்தை அநுஸரிக்கும் ப்ரஜைகளிடம் இந்த ப்ரவ்ருத்தி மிகுதியாக இருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். நமது தேசத்திலும், பூர்வகாலத்தில், ஸர்வபூத ஸுஹ்ருத்துக்களாக இருந்த நமது பூர்வாசார்யர்கள், அஜ்ஞாநத்தால் தடுமாறுகிற ப்ரஜைகளிடம் க்ருபை கூர்ந்து அவர்களும் ஜ்ஞாநம்பிறந்து உஜ்ஜீவிக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணத்துடன் கணக்கற்ற ஏற்பாடுகளைச் செய்து வந்தார்கள். ஆனல், நமக்குத் தெரியாத ஏதோ ஒரு துஷ்க்ருத விசேஷத்தால் அந்த ஏற்பாடுகள் எல்லாம் மலிநங்களாகிவிட்டன. ஈச்வரேச்சை இப்பொழுது இவைகளுக்கு உந்மேஷத்தைக் கொடுக்கவில்லை. காலவைபரீத்யத்தால் இவைகளுக்கு ஒரு துர்த்தசை ஜநித்து, நமது பூர்வாசார்யர்களாற் செய்யப்பட்டுள்ள தத்வோபதேசத்தை நன்ருக உணர்ந்து அநுஷ்டித்துவரும் நமது பெரியோர்களை நாம் அநாதரிக்கும்படியாகவும், நமது பாஷை ஆசாரம் இவைகள் எல்லாவற்றிற்கும் அநபிஜ்ஞர்களான தேசாந்தரவாஸிகளிடம் முழு நம்பிக்கைகொண்டு பெருமை பாராட்டும்படியாகவும், மதஸ்தாபகரென்று பெயர்பூண்டுவரும் அவர்களிற் சிலரிடம் நாம் ஆசார்ய விச்வாஸம்வைத்து உத்தாரக புத்தி பூர்வக க்ருதஜ்ஞதையை அவர்களிடம் அநுஸந்திக்கும்படியாகவும்நேர்கிறது. இது மாத்திரமோ? நமக்கு ஸ்வபாஷையான ஸம்ஸ்க்ருதம் த்ராவிடம் முதலிய பாஷாப்ரவசநத்திற்குக் கூட நமது தேசத்திய பண்டிதர்களைவிட தேசாந்தரீயர்களுக்கு ப்ராவீண்யம் அதிகமென்று அபிஜ்ஞர்களும் எண்ணும்படியாகவும் நேர்ந்துவிட்டது. "காலோ ஹி து-ரதிக்ரம:."

இப்படிப்பட்ட மாலிந்யம் வந்திருந்தாலும், 'பூர்வகாலத்தில் நமது பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட வ்யவஸ்தைகள் என்ன? எவ்விதமான அபிப்ராயத்துடன் அவைகள் ஏற்படுத்தப்பட்டன? இப்பொழுது நேர்ந்திருக்கும் மாலிந்யத்திற்கு ப்ரதீகாரம் ஏதாவது உண்டோ?' என்பதைச் சிறிது விசாரிப்போம். இந்த வ்யவஸ்தைகளில் மிகவும் முக்கியமானது, ஆசார்ய ஸ்தாந கல்பநம் என்பது தான். அதாவது - உபநிஷத்துக்கள் முதலிய நமது ஶாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கும் தத்வ ஹித புருஷார்த்தங்கள் எல்லாம் கேவலம் பண்டிதர்களுக்கு மாத்திர மன்றிக்கே ஸ்த்ரீ ஶூத்ர ஸாமாந்யமாக எல்லாருக்கும் உபயோகப்பட்டு ஸகல ப்ராஜைகளும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்கிற நல்ல எண்ணத்துடன் அநேக ஆசார்ய ஸ்தாநங்களை ஏற்படுத்தியும், நமது ஸித்தாந்தத்தில் ஶ்ரத்தை யில்லாதவர்களுக்கும் ஶ்ரத்தை உண்டுபண்ணும் பொருட்டும் ஶ்ரத்தாளுக்களான ஆஶ்ரித ஜநங்களுக்குத் தத்வத்தை உபதேஶித்து உஜ்ஜீவந உபாயங்களைச் செய்யும்பொருட்டும் அந்த ஆசார்யர்களுக்கு அதிகாரம் கொடுத்தும், இந்த வ்யவஸ்தைக்கு ஒரு தார்ட்யத்தை உண்டுபண்ணும்படி அந்த ஆசார்யர்களுக்கும் அவர்களை ஆஶ்ரயித்த ஶிஷ்யர்களுக்கும் ஶாஶ்வதமான ஒரு ஸம்பந்தத்தை ஏற்படுத்தியும், இதரர்களுடைய பரிஶ்ரம மன்றிக்கே தனக்குத்தானே வ்ருத்தி யடையும்படி நமது பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டுமுள்ள ஒரு ஏற்பாடு. இது, இப்பொழுது, ஆசார்யபுருஷ ஸம்ப்ரதாய மென்றும், ஸ்ரீ அஹோபிலம் வானமாமலை முதலிய ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாய மென்றும், முநித்ரய ஸம்ப்ரதாயமென்றும் பலவகைப்பட்டு வழங்குகின்றது. இந்த வ்யவஸ்தையின் தீர்க்க கால அநுஷ்டாநத்தினாலேயே, நமது ஸித்தாந்தம் இவ்வளவு தூரம் ப்ரசாரமாகி யிருக்கின்றது என்று சொல்லவேண்டும். இம்மாதிரியான ஒரு வ்யவஸ்தை வழங்கி வராம லிருக்கும் பக்ஷத்தில், நமது வித்யை ப்ராயஶஃ ஸ்வல்ப காலத்திலேயே லுப்தமாகி, நாம் எல்லாரும் இப்பொழுது இருள் சூழ்ந்தவர்களாக க்ருமி கீடங்கள் போலவே இருந்திருப்போம். அவ்விதமான துர்த்தஶையிலிருந்து நம்மைக் காப்பாற்றினதற்கு, இந்த வ்யவஸ்தையின் ஆதி கர்த்தாக்களே ப்ரதாந காரணம். ஆனால், எந்த வ்யவஸ்தையும், மிகுந்த ஆலோசனையுடன் உண்டு பண்ணப்பட்டிருந்தபோதிலும், அது ஸங்குசித ஜ்ஞாநர்களான

மநுஷ்யர்களுடைய ஹஸ்த கதமாகி அவர்களால் ஸ்வல்பகாலம் அநுஷ்டிக்கப்பட்டு வந்தால், அவைகளின் ஸாத்விக பாகமாகிற யாதார்த்யம் மறைந்து, அப்ரதாநமாகிற சில அம்ஶம் தலையெடுத்து, முடிவில் வஸ்துலோபம் வாராவிட்டாலும் விபரீதமாகப் பர்யவஸிக்கின்றது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அம்மாதிரியாகவே, இந்த வ்யவஸ்தையும், காலக்ரமேண சில வைபரீத்யங்களை அடைந்தது. ஆசார்ய புருஷ ஸம்ப்ரதாயம் என்கிற ரீதியைக் கைப்பற்றினவர்களின் விஷயத்தில், ஸதாசார்யர்களுக்கு அஸாதாரணமாக இருக்கவேண்டிய ஜ்ஞாநாநுஷ்டாநம் முதலியவை பொருந்தாமலிருக்கும் அநேகர், கேவலம் பூர்வாசார்ய ஸந்ததி ஜாதர்களென்கிற காரணத்தினால் ஆசார்யகம் செய்ய ஆரம்பித்து, முக்கியாம்ஶமாக இருக்கும் ஜ்ஞாந ப்ரதாநம் என்பதைக் கைதவறவிட்டு, சில ஸ்வ ப்ரயோஜநங்களை மாத்திரம் தேடிவரும்படி ஸம்பவித்திருக்கிறது. அந்த அநிஷ்டமான பர்யவஸாநத்தின் பரீவாஹத்தை இப்பொழுதும் அநேக இடங்களிற் காணலாம். ஸாத்விக ஶிரோமணிகளாகவும் பாப பீருக்களாகவும் இருக்கும் சில மஹாங்களை விலக்கிவிட்டால், பரம்பராகதமான ஆசார்ய ஸ்தாநத்தை வஹித்துவரும் ஆசார்யர்களில் அநேகர் இந்தத் தர்மத்தை ஒரு வ்ருத்தியாக வைத்துக்கொண்டு அதனால் ஜீவித்து வருகிறார்கள் என்பதில் ஏதாவது விப்ரதிபத்தி உண்டாகுமோ? அப்படி வர்த்தித்துவரும் ஸ்வாமிகளின்மீது தோஷாவிஷ்கரணம் செய்யவேணுமென்கிற எண்ணத்துடன் அடியேன் இவ்விதமாக விஜ்ஞாபநம் செய்துகொள்ள ஆரம்பிக்கவில்லை. யதார்த்தமாகவே தாபத்ரயத்தாற் பீடிக்கப்பட்டு ஜீவநாந்தரம் ஒன்றும் கிடைக்காமல், 'குடும்ப போஷணம் எவ்விதமாகச் செய்யப் போகிறோம்?' என்கிற சிந்தையால் ஒருவன் க்ரஸிக்கப்பட்டால், அவனுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தம் இருக்கும் வரையில் இந்த வ்ருத்தி ஶாஸ்த்ர ஸம்மதமன்று என்றும், இந்த வ்ருத்திக்குத் தனக்கு அதிகாரமில்லை என்றும், இந்த வ்ருத்தியில் தர்மலோபம் ஸம்பவிக்கிறது என்றும், இத்யாதியான விசாரம் சிறிதேனும் உண்டாகாதுதான். இது ஸர்வஜந ஸாமாந்யமே. ஆனால், விவேகிகளாக இருப்பவர்கள், சற்று ஆலோசித்தே ப்ரவ்ருத்திப்பார்கள். கஷ்டதஶையால் உண்டாகும் ஆந்த்யம் அவர்களை அவ்வளவாக மூடிவிடாது. ஆனாலும், வ்ருத்திகளுடைய குணதோஷ

தாரதம்யத்தைப் பார்க்குமளவில், பரம்பராகதமான ஆசார்ய கத்தை வ்ருத்தியாகக் கொள்வது மிகவும் துஷ்டமன்று என்றே சொல்லவேண்டும். அத்யந்தம் நிக்ருஷ்டமாகவும், ஶாஸ்த்ர அஸம்மதமாகவும் அநநுரூபமாகவும் இருக்கும் ஹீந வ்ருத்திகளைவிட இது எவ்வளவோ மடங்கு ஶ்லாகநீயமே! ஆனல், இந்த வ்ருத்தியை அநுஷ்டிக்குமவர்கள், தமது ஆசார்யகத்திற்கு அவஶ்யமான தர்மத்தைச் செய்துவராமல் முன்னேர்களால் ஏற்படுத்தப்பட்ட வ்யவஸ்தையின் ஸாராம்ஶத்திற்கு லோபத்தை ஸம்பாதித்து விட்டார்களே! என்கிற துக்கம்தான் அடியேனை இவ்விதமாக விஜ்ஞாபநம் செய்துகொள்ளும்படி ப்ரேரிப்பித்தது. அதை க்ஷமிக்கவேணும். ப்ரிய வசநமன்றிக்கே வஸ்து ஸ்திதியை விஜ்ஞாபநம் செய்துகொள்வதும் தர்ம்யமாகையால், இந்த வ்யாபாரத்தில் அடியேன் துணிந்தேன். ஒருகால், ஆசார்யர்கள் இவ்விதமாக ஸ்வ தர்மாநுஷ்டாநத்திலிருந்து வழுவினதற்குக் காரணம், ஶிஷ்யர்களுடைய அஶ்ரத்தையும் அநர்ஹதையுமாகவே இருக்கலாம். எந்தக் காரணமாக இருந்தாலும், வ்யவஸ்தை வைகுண்யத்தை அடைந்துவிட்டது என்பதில் சிறிதும் ஆக்ஷேபமில்லை.

இதர ஆசார்ய ஸ்தாநங்களும், இம்மாதிரியாகவே வரவர ஶிதிலமாகிக்கொண்டே வருகின்றன. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ஆஜ்ஞையை முன்னிட்டு ஸ்ரீ ஆதிவண்ஶடகோபஸ்வாமியினல் ஏறக்குறைய 500-வருஷங்களுக்குமுன் ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீ அஹோபிலமடம் என்னும் ஒரு வ்யவஸ்தாந்தரத்தைப்பற்றி மாத்திரம் அடியேன் இப்பொழுது விசாரிக்க ப்ரவ்ருத்திக்கிறேன். இந்த வ்யவஸ்தையில் சில விஶேஷித்த குணபாகங்கள் உண்டு. 'ஸந்ததியை ஆசார்யகம் அவலம்பித்து நின்றல், ஜ்ஞாநாநுஷ்டாநாதிகள் பொருந்தாத ஆசார்யர்கள் ஸம்பவிக்கக் காரணமுண்டு' என்று கருதி, ஸ்ரீ ஆதிவண் ஶடகோபஸ்வாமீ, இந்த ஸம்ப்ரதாயத்தில் அந்தந்தக் காலங்களில் ஜ்ஞாநாநுஷ்டாநாதிகளால் ஸம்பந்நர்களான மஹாங்களையே ஆசார்யர்களாக வரிக்கும்படியாகவும், அவர்களிடமிருந்து சிஷ்யர்கள் வித்யையைப் பெற்றுக்கொள்ளும்படியாகவும் ஏற்பாடு செய்திருக்கிறார்; ப்ரமாதாதிகளுக்குப் பெரும்பாலும் காரணமான கார்ஹஸ்த்யத்தைத் தூரீகரிக்க வேணுமென்று எண்ணி, துரீய ஆஶ்ரமத்தையே ஆசார்யர்களுக்கு அஸாதாரணமான ஆஶ்ரமமாகவும் செய்திருக்கிறார். தவிரவும், ஸம்ஸ்க்ருதியில் ப்ரவ்ருத்தித்திரு

க்கும் ஶிஷ்யர்கள் தங்களுடைய ப்ரயத்நத்தையே கைக்கொண்டு ஆசார்யர்களை வரித்தால் தவறுதலுக்குக் காரணமாகும் என்கிற பீதியுடன் 'ஸ்வயமேவ ஆத்மநா ஹவதா' என்கிற நிர்த்தாரணம் செய்யவேண்டிய அதிகாரமும், ஶிஷ்யர்களுடைய ஹிதத்திலேயே அபிநிவிஷ்டரான பூர்வ பூர்வ ஆசார்யர்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. தாரித்ர்யத்தால் வருந்தி அதனல் உண்டாகும் பலகஷ்டங்களாற் பீடிக்கப்படும் ஆஸ்திகர்களுக்கு யதோசிதம் அர்த்தத்தால் உபகரித்து, ஆத்மவித்யையை உபதேஶம் பெற்றுக்கொள்வதற்கு அவஶ்யமான ஐகாக்ர்யத்தை அவர்களுக்கு ஸம்பாதித்துக் கொடுப்பதும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திருவுள்ளத்திற்கு உகப்பு என்று எண்ணி, இந்த ஆஸ்தாநத்திற்கு ஏராளமான அர்த்தமும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாக ஆபந்ந ஜநஸாமாந்யத்திற்கே ஒரு ஶரண்ய ஸ்தாநமாக இது இருக்கவேண்டியது என்பதும், இந்த ஸ்ரீ மடத்தின் ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளி ஸகல அதிகாரத்தையும் வஹிக்கும் ஸ்ரீ ஸ்வாமீ ஸூர்யாம்ஶுக்களால் ஸூர்யன் போல ஸர்வ ஜநமநோரஞ்ஜநங்களாகிற கல்யாண குணங்களாலே ஶோபித்துக்கொண்டு பண்டிதபாமர விஶேஷமற்று எல்லாரையும் ரஞ்ஜிப்பித்துத் தாமும் அவர்களுடைய அநுராக விஷயீக்ருதராக இருக்கவேண்டுமென்பதும், இப்படி நித்யம் ப்ரஶாந்தாத்மாவாகவும் ம்ருதுபூர்வாபிபாஷியாகவும் தீநாநுகம்பியாகவும் ஸ்ரீ ஸ்வாமி எழுந்தருளியிருந்து ஆஶ்ரிதர்களுக்கு ஜ்ஞாநத்தை உண்டுபண்ணிக்கொண்டிருக்கவேண்டுமென்பதும், இவ்விதமாக ஶோபிக்கும் இந்த ஸ்ரீ ஸந்நிதியை ஆசார்யவரணம்பண்ணி அடைந்த ஸகல ப்ரஜைகளும் ஜ்ஞாநஸம்பந்நர்களாகிக் கைங்கர்யைகரஸர்களாய் இந்தப் பூமியையே வைகுண்டம்போல அநுபவித்து "ஸம்ஸாரே ஸ்வஷ ஹஸவஜ்வ வஸூஷவ" என்று பெருத்த நிர்வ்ருதியை அடையவேண்டுமென்பதும், இந்த வ்யவஸ்தையை உண்டு பண்ணின மஹாநுபாவரின் ப்ரத்யாஶை. யதார்த்தமாகவே, இப்படி ஸகலவிதத்திலும் நமக்குப்பரமோபகாரகராக இருந்து கொண்டு, யாத்ருச்சிகமாக நம்மிடத்திலிருந்து ஸம்பவிக்கும் உபகாரலேஶத்தை மஹத்தாகப் பாவித்து நாம் புத்திபூர்வகமாகச் செய்யும் அபராத ஸஹஸ்ரங்களை மறந்து, நம்முடைய வ்யஸநங்களில் ப்ருஶம் துக்கிதராகவும் நம்முடைய உத்ஸவங்களில் ப்ருஶம் ஸந்துஷ்டராக

வும் ஒரு ஸௌஹ்ருத் இந்த லோகத்தில் நமக்குக் கடித்தால், அதுகாரணமாக வாசாமகோசரமான நிர்வ்ருதியை அநுபவிப்போம் என்பதில் என்ன ஆக்ஷேபம்? "பலமாரோக்யமாயுஶ்ச ராமஸ்ய விதிதாத்மந: - ஆஶம்ஸதே ஜநஸ்ஸர்வோ ராஷ்ட்ரே புரவரே ததா ॥ ஸ்த்ரியோ வ்ருத்தாஸ்தருண்யஶ்ச ஸாயம் ப்ராத ஸ்ஸமாஹிதா: - ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யஶஸ்விந:" என்கிறபடியே ப்ரேம பாரவஶ்யத்தால் ஆந்த்பத்தை அடைந்து ப்ரார்த்தநீய அப்ரார்த்தநீய தேவதா விவேகமன்றிக்கே கண்ட விடங்களிலெல்லாம் இப்படிப்பட்ட சிறந்த உபகாரகனுக்கு மங்களங்களை ப்ரார்த்தித்துக்கொண்டு ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் காலத்தில் ப்ரஜைகள் ஆநந்தித்ததுபோலவன்றோ ஆஶ்ரிதர்கள் எல்லாரும் ஆநந்தித்து நிற்பார்கள்? "ஸர்வம் பூர்ணம் ததேவாஸ்து ஸர்வோ(அ)ப்யுத்ப்ரரோஹவேஷு" என்பது தான் அபார கருணா நிதியாகிற இந்த வ்யவஸ்தையை உண்டு பண்ணினவருடைய மநோரதம்.

இவ்வளவு குணபூர்த்தியையும் மஹான்களுடைய கடாக்ஷத்தையும் பெற்று இந்த லோகத்திலே ஜநித்த இந்த வ்யவஸ்தை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடையதிருவுள்ளத்திற்கு உகப்பாகவே கொஞ்சகாலம் அபிவ்ருத்தமாகி, ஆத்ம வித்யாப்ரசாரத்தை பஹுஶ: ஸாதித்து, பிறகு வ்யவஸ்தாந்தரங்களைப் போலவே இதுவும் தோஷதுஷ்டமாகி ஶைதில்யத்தை அடைந்து வருகின்றது. எந்த ப்ரகாரத்தில் இந்தவ்யவஸ்தைக்கு ஶைதில்யம் உண்டாகிறது? என்று ஆலோசித்துப் பார்த்தால், அதிக உத்ஸாஹத்திற்குக் காரணம் ஒன்றையும் காணோம். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திருவாராதநம், அந்த ஆராதநத்திற்கு உபயுக்தமாகும் சொத்துக்களை அபிவ்ருத்தி செய்தல், அந்தச் சொத்துக்களை ஸத்பாத்ரத்தில் விநியோகித்தல், ப்ரதி க்ராம நகர ஸஞ்சாரம் பண்ணுதல், ஆஶ்ரித ஜநங்களுக்குத் திருவிலச்சினை திருமந்த்ர மந்த்ரார்த்த ப்ரதிபாதநம் செய்தல், பக்தர்களின் விஷயத்தில் க்ரந்த காலக்ஷேப புரஸ்ஸரமாகத் தத்வோபதேஶத்தைச் செய்தல், ஆஶ்ரித ஸாமாந்யமாகப் பரந்யாஸம் முதலிய உஜ்ஜீவநஉபாயங்களைச் செய்தல், இவை முதலிய பஹுப்ரகாரமான தர்மம் இந்த ஆஸ்தாநத்திற்கு

எழுந்தருளும் ஸ்ரீஸ்வாமியைப் பொறுத்ததாக இருக்கிறது. இவை எல்லாவற்றையும் த்ருப்திகரமாகவும் ஶாஸ்த்ர ஸம்மதமாகவும் நிர்வஹிக்க, விஶேஷித்த ஶக்தியையுடைய வ்யக்தியே அபேக்ஷிதம். 'ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் யாரைத் திருவுள்ளம்பற்றி இந்தப் பாரத்தை வஹிக்கும்படி ஸங்கல்பிக்கிறானோ, லக்ஷ்மீந்ருஸிம்ஹ கடாக்ஷம்பெற்ற அவர் மிகவும் அஶக்தராகவும் அநர்ஹராகவும் இருந்தாலும் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் திருவுள்ளம் பற்றின மாத்திரத்தாலே ஸகலகுணமும் நிறைந்தவராக ஆகிவிடுகிறார்,' என்றுசொல்வது அபிஜ்ஞர்களுக்கு லக்ஷணமன்று. நமது ஸித்தாந்தத்தின் ரஹஸ்யத்தை அறிந்தவர்கள் இந்தச் சொல்லை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். திருவாராதநாதிகளின் சிறப்பு, ஸ்ரீ ஸ்வாமிகளின் அர்ஹதாதீநமே. விரக்தாக்ரேஸரர்களும் ஜ்ஞாநாநுஷ்டாநம் முதலிய ஸம்பத்துக்கள் பொருந்தினவர்களுமான ஸ்ரீ ஸ்வாமிகளின் காலங்களில் ஆராதநாதிகள் வெகு சிறப்பாக நடப்பதும், தத்விபரீதமான ஸ்ரீ ஸ்வாமிகளின் காலங்களில் அந்தத் தர்மங்களுக்கு லோபம் ஸம்பவிப்பதும் நமக்கு அநுபவஸித்தம். இப்படிப்பட்ட காரணத்தாலோ,கலிப்ராபல்யத்தாலோ, வேறுஎவ்விதமான ஶிஷ்ய தௌர்ப்பாக்யத்தாலோ ஸ்வல்ப காலமாக இந்தத் தர்மங்களில் பெரும்பாலும் எல்லாம் நஷ்டமாகிக்கொண்டேவருகின்றன. 'ராஜசிஹ்நங்களாகிற ஶிபிகைமுதலிய பிருதுகள் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கே தவிர நமக்கு இல்லை' என்கிற எண்ணங்கொண்ட வைராக்ய நிதிகள் ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளி எப்பொழுதாவது ஸ்ரீ ஸந்நிதி அபிவ்ருத்தியை அடையும் மார்க்கத்தில் வரும்போல இருந்தாலும் அந்த ஸ்திதி நீடித்து நிற்பதில்லை. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ஆராதநோபயுக்தமாக வேண்டும் சொத்துக்களும் பலவிடங்களில் அந்யாக்ராந்தங்களாகவும் இதரதா நஷ்டங்களாகவும் ஆகிக்கொண்டு வருகின்றன. பலவிடங்களில் இன்னும் நஷ்டமாகாமலிருக்கும் சொத்துக்களிலிருந்து ந்யாய்யமாகக்கிடைக்கவேண்டிய வ்ருத்தியம்ஶங்கள் ஸரிவர வஸூலாகாமல் குறைவுபட்டு வருகின்றன. புதிதாக ஸ்ரீ ஸந்நிதிக்குச் சொத்துக்கள் ஸமீப காலத்தில் சேர்ந்ததாகவும் தெரியவில்லை.

கைவசத்தில் வரும் அர்த்தத்திற்கும் ஏதோ அநபேக்ஷிதமான செலவு நடந்து வருகிறதே தவிர ஸந்த்ருஷ்டமாகவும் நடந்து வரக்காணோம். 'பகவத்ராமாநுஜ ஸித்தாந்தத்திற்குப் பெரு

த்த லோபம் வந்துவிடுகின்றதே! அந்த லோபத்தை வரவொட்டாமல் தடுத்து அந்த ஸித்தாந்தத்தைத் தழைக்கும்படி செய்யவேண்டியதன்றோ நம்முடைய முக்கிய தர்மம்?' என்று அறிந்து, தமக்கு அஶக்தியாக இருந்தாலும், இதர ஆஸ்திக வித்வாங்களைக்கொண்டு சில விடங்களிலாவது க்ரந்த காலக்ஷேபாதிகளை ஸ்ரீஸ்வாமிகள் நடத்திவரக்கூடாதா? ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதாத்யயநங்கள் வரவர லுப்தங்களாகி விடுகின்றனவே! ஆலயங்களில் உத்ஸவத்திற்கு முக்கிய அங்கமான அத்யயந ரூப கைங்கர்யமே இன்னும் ஸ்வல்பகாலம் சென்றால் ஒளிந்துவிடும்போல் இருக்கின்றதே! அநேக ஆலயங்களில், இப்பொழுதே வேதபாராயண கோஷ்டிகளுக்கு ஸ்வாமிகள் துர்லபமாகி அத்யயநம் என்கிற அங்கமின்றிக்கே உத்ஸவங்கள் நடந்துவருவதை நாம் பார்க்கிறோம். க்ருஹங்களிலும் ஶுப காலங்களில் வேதாத்யயநம் செய்த ஸ்வாமிகள் பெருத்த கோஷ்டியாகச் சேர்வதும், ததீயாராதநத்திற்கு அஸாதாரணஶோபையைக் கொடுக்கும் ஶ்ருதி ஸுகமான ஸம்ஹிதா ஶாகா பாராயணம் செய்வதும் துர்லபமாகிவிட்டது. ப்ராஹ்மணர்களுக்கு அஸாதாரண சிஹ்நமான இந்த வேதாத்யயநத்தை லோபமாகாமல் தடுப்பது, நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களின் தர்மமாகத்தானே ஆகிவிட்டது!

தவிரவும், தேஶாந்தர வாஸிகளால் ராஜ்யாதிகாரம் வஹிக்கப்பட்டு வரும் இந்தக்காலத்தில், ராஜபாஷையை அப்யஸிப்பதும், தத்ஸம்பத்தமான ஶாஸ்த்ரங்களில் ப்ராவீண்யத்தை ஸம்பாதிப்பதும், அப்படி ஸம்பாதித்து ராஜபுருஷர்களால் அபிமாநிக்கப்பட்டுச் சிறந்த பதவியை அடைய முயல்வதும் சாதுர்வர்ண்ய ஸாமாந்யமான தர்ம மாகிவிட்டது. அப்படிச்செய்வது தோஷமென்பது அடியேனுடைய அபிப்ராயமன்று. காலாநுகுணமாக ப்ரவ்ருத்தி பேதங்கள் உண்டாவது நைஸர்க்கிகமானபடியால், அது அநிவாரணீயமே. ஆனால், ஸதாசாரஶ யோக்யதையை ஸம்பாதிக்கும் பொருட்டு, இளவயதிலேயே பாலர்களைப் பெரியோர்களுடைய பராமர்சிப்பு இல்லாமல் பலவித ஜநங்களால் வஸிக்கப்படும் பெரிய நகரமான ஸ்தலாந்தரங்களுக்கு அனுப்பி மனம்போன போக்கெல்லாம் அவர்களைப் போகவொட்டாதபடி தடுக்கவேண்டிய வ்யவஸ்தைகள் ஒன்றையும் செய்யாமல், ஶக்திக்கு மீறி அர்த்த வ்யயமும் செய்து, 'நமது குமாரர்கள் வித்

யாஸமாபநம் செய்து தகுந்த அதிகாரத்திற்கு யோக்யர்களாகச் சீக்கிரத்தில் வந்துவிடுவார்கள்' என்கிற ப்ரத்யாஶையுடன் அநேக குடும்பிகள் படும் பரிஶ்ரமத்தின் பலத்தைப் பார்க்கும்பொழுது, மநஸ் கேதத்தை அடைகின்றது. நமது பாலர்கள் ஸதாசார ஹீநர்களாகவும், பெரும்பாலும் நாஸ்திகர்களாகவும் மாறிவிடுவது, அவர்களது தோஷமன்று. "ஸம்ஸர்கஜா தோஷகுணா பவந்தி"; அவர்களுக்கு ஸாதுக்களின் ஸங்கம் நேராமல், அவர்கள் விபரீதமாக மாறிவிடுகிறார்கள். ப்ரத்யக்ஷங்களான தேஹாதிகளைக் காட்டிலும் அதீதமாக ஆத்மா ஒன்று இருக்கின்றது என்றும், அதன் உஜ்ஜீவநத்தைத் தேடுவதே அவஶ்யம் என்றும், அப்படித் தேடுவதில் நமது ஶாஸ்த்ரம் சாதுர்வர்ண்யாதி ரூபமான சில நியமங்களை விதித்திருக்கிறது என்றும், அந்த நியமங்களுக்குக் கட்டுப்பட்டு வர்த்தித்தால்தான் நமக்கு ஶ்ரேயஸ் உண்டு என்றும் இத்யாதியான ஜ்ஞாநம் ஜநிக்க அவர்களுக்கு அவகாஶமே இல்லை. இவ்விதமான காரணங்களால் பாஷாந்தராப்யாஸம் செய்யும் நமது பாலர்கள் மிகுந்த ஶோச்ய தஶையை அடைந்திருக்கிறார்கள். இந்த ஸ்திதியை நாம் அநாதரித்திருப்பது நமக்குத் தர்மமாகுமா? ஏராளமான சொத்தை வஹித்துக்கொண்டு ப்ரஜைகளின் ஆநுகூல்யத்திற்காகவே ஆஸ்தாநாதிகாரத்தைப் பெற்று நிற்கும் ஸ்ரீ ஸ்வாமிகள், இம்மாதிரியாக நமது பாலர்களுக்கு நேரும் விபத்தைப் பார்த்து உதாஸித்து வரலாமா? தம்மிடத்திலிருக்கும் சொத்தில் ஒரு பாகத்தையாவது இந்த நாஶத்தின் ப்ரதீகாரத்தைத் தேடுவதில் செலவிடவேண்டுவதில்லையோ? ஆசாராதிகள் குறையாமலிருக்கவும், நமக்குப் பரம்பராகதமான வேதாந்த வித்யையை ப்ரசாரம் செய்யவும், பாலர்களுக்கு உசிதங்களான க்ரந்தங்களை எழுதி ப்ரசுரம் செய்யவாவது, அதற்காகச் சில போதகாசார்யர்களை ஏற்படுத்தவாவது, தத்விதமான பாடஶாலைகளையும் வித்யார்த்தி நிலயங்களையும் ஏற்படுத்தவாவது ஸ்ரீ ஸ்வாமிகள் முயற்சியை எடுத்துக்கொள்ளக்கூடாதா? நமது தேஶத்திற்கு நேரும் இந்தத் தைந்யத்தைத் தேஶாந்தரத்திலிருந்து வந்திருக்கும் சில உதாரர்கள் பார்த்துத் தத் ப்ரதீகாரத்தை அவர்கள் தேடும்படியாகத்தானே நேர்ந்துவிட்டது!

இன்னும் பகவதநுக்ரஹத்தைப்பெற்று ஜ்ஞாநசக்ஷுஸ்ஸை அடைந்து அஸாதாரணமான ஜ்ஞாநத்துடன் மஹர்ஷிகளால் எழு

தப்பட்டும், ஜநங்களுக்குப் பலவிதத்தில் உபகாரகமாகவுமுள்ள தந்வந்த்ர்யாதி ப்ரணீத ஶாஸ்த்ரங்களில் அநேகம் கால வைபரீத்யத்தால் லுப்தமாகி வருகின்றன என்பது எல்லாருக்கும் தெரியும். அப்படி அவைகள் லோபத்தை அடையவொட்டாமல் அவைகளைப் பாதுகாப்பதும் ஒரு நன்மையன்றோ? அந்த வழியிலும் ஸ்வல்பமேனும் செலவு நடந்ததாகத் தெரியவில்லை.

பூர்வகாலத்தில், பஹுவான அர்த்தவ்யயத்தைச் செய்து அநேக ஸ்தலங்களில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் நித்யோத்ஸவம் கண்டருளும்படியாகவும், அங்கேயிருக்கும் ஜநங்கள் அப்படி உத்ஸவம் கண்டருளும் ந்ருஸிம்ஹனை ஸேவித்து அதனால் ஐஹிக ஆமுஷ்மிக ரூபமான பலத்தை அடையும்படியாகவும் கணக்கற்ற ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. ஸ்வல்பகாலமாக ஸ்ரீ அழகிய சிங்கர்கள் அவைகளைக்குறித்துக் கிஞ்சித் ஔதாஸீந்யத்தை வஹிக்கவே, பஹு இடங்களில் அவ்வித உத்ஸவார்த்தம் நிர்மிக்கப்பட்டிருந்த ஸ்தலங்கள் ஜீர்ணமாகியும் அந்த உத்ஸவங்களுக்கென்று விடப்பட்டிருக்கும் சொத்துக்கள் அந்யதா உபயுக்தமாகியும் வருகின்றன. இவைகளைக் கொஞ்சம் பராமர்ஶித்துப் பூர்வர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த வ்யவஸ்தைகளுக்கு மாலிந்யம் வராமல் ஸம்ரக்ஷிக்கவேண்டியது ஸ்ரீ அழகிய சிங்கர்களின் முக்கிய தர்மங்களில் ஒன்றே. இப்பொழுது ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கர், இந்த விஷயத்தில் தமது தர்மத்தை உணர்ந்து, திருநாராயணபுரத்திலுள்ள ஸ்ரீ ஆதிவண் ஶடகோபஸ்வாமியின் ப்ருந்தாவநத்தை இரண்டொரு ஸஹஸ்ர ரௌப்யங்களைச் செலவிட்டுப் பரிஷ்கரித்திருக்கிறார். இது, மிகவும் புகழத்தக்கதே. ஆனால், இன்னும் இப்படியே கவனிக்கவேண்டிய அம்ஶங்கள் பஹுவாக இருக்கின்றன.

இம்மாதிரியாக ஜநங்களுக்கு ஐஹிகத்திலும் ஆமுஷ்மிகத்திலும் ஶ்ரேயஸ்ஸைச் செய்யக்கூடிய மார்க்கங்கள் அஸங்க்யேயங்களாக இருக்கின்றன. இவைகள் எல்லாவற்றையும் பர்யாலோசித்துச் செலவிட்டாலன்றோ ஸந்த்ருஷ்ட வ்யயம் நடக்கிறது என்று சொல்லலாம்?

ஸ்ரீ ஸந்நிதிக்கு உரிய மற்றைய தர்மங்களும் இப்பொழுது செழிப்பாக வளர்ந்துவரவில்லை. ஸஞ்சாரமென்பதே நின்று எவ்

வளவோ காலமாகிவிட்டது. நமது ஸ்ரீ ஸந்நிதிக்கு மூல ஸ்தாநமாயுள்ள ஸ்ரீ அஹோபிலத்திற்கு ஸமீபத்தில் வஸிக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிஹ்மாநுக்ருஹீதர்களான ஶிஷ்யர்கள், தங்களுக்கே அஸாதாரணமாகச் சொந்தமாயிருந்த குலதைவத்தை யாரோ அபஹரித்துப் போய்விட்டதுபோலக் கதறுகிறார்கள். தங்களுக்குக் கொஞ்சகாலமாக நேரும் து:ஸ்திதிகளெல்லாம் அந்த லக்ஷ்மீந்ருஸிஹ்மா பஹாரத்தாலேயே ஜநிக்கின்றன என்று நினைத்து அநவரதம் ஶோகிக்கிறார்களாம். அவர்களுடைய தேஶத்திற்கு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மனை எழுந்தருளப்பண்ணி அவர்களுக்கு இருக்கும் மனத்துபரத்தைப் போக்கி ஸ்ரீ ந்ருஸிஹ்மனிடத்தில் அவர்களுக்கு உண்டான பக்தியை வ்ருத்திசெய்வதன்றோ, ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு லக்ஷணமாகும்? அப்படிச் செய்யாமல், ஆர்த்தரான ஶிஷ்யர்களைக் கதறவிட்டு அந்தக்கதறுதலைத் தாம் சற்றும்திருச்செவி சாத்தாமல் எழுந்தருளியிருப்பதும், அபார கருணையை யுடைய ஸ்ரீ அழகியசிங்கர்களுக்கு உபபந்நமாகுமா? இன்னும் அநேக ஸ்தலங்களில் கணக்கற்ற ஶிஷ்யர்கள், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன் எழுந்தருளியிருக்கும் இடத்திற்குத் தாமே போகத் திறமையற்றவர்களாய், ஸ்ரீ வைஷ்ணவஸ்வரூபங்களான திருவிலச்சினை மந்த்ர மந்த்ரார்த்தம் முதலியவற்றை இழந்து, தத்வ ஜ்ஞாநத்தைப் பெறாமலும், உஜ்ஜீவந உபாயங்களை அநுஷ்டியாமலும், மஹத்தான ஶோகத்தால் வருந்தினவர்களாகவே தேஹவியோகத்தை அடைகிறார்கள். மற்றும் பலர், இந்தத் துர்த்தஶையை ஸஹிக்கமாட்டாமல் ஆசார்யாந்தரங்களை வரித்துத் தமக்கு ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொள்ள முயல்வதையும் நாம் பார்க்கிறோம். இவை யெல்லாம் ஸ்ரீ மடத்தின் அபிவ்ருத்தி லக்ஷணங்களாகுமா? மஹா வித்வாங்களுடைய பெருத்த ஸமாஜமாகவும், வித்யைகளுக்கெல்லாம் உத்பத்தி ஸ்தாநமாகவும், எவ்விதமான நாஸ்திகர்களுக்கும் பாப பயத்தையும் தைவ பக்தியையும் ஜநிப்பிக்கக் கூடியதாகவும், ஸாதுக்களுக்கெல்லாம் ஒரு நிவாஸ வ்ருக்ஷமாகவும், ஸம்ஸார மருகாந்தாரத்தில் பச்யமாநர்களான ஜீவன்களுக்கு ஶாஶ்வதமான ஆறுதலைக் கொடுக்கக்கூடிய ஒரு ஶீதள ஸரஸ்ஸாகவும் இருக்கவேண்டிய இந்த மடம் மிகவும் விபரீதமாக மாறியிருக்கின்றதே! இந்த மாறுதல் இன்னும் ஸ்வல்ப காலத்திற்கு நடந்துவந்தால், 'ஸ்ரீ மடமும் இருந்ததோ?' என்று எண்ணும்படியாக ஆகிவிடுமன்றோ!

'இதற்கு ஏதாவது ப்ரதீகாரம் உண்டா? என்ன செய்தால், பூர்வர்களால் உத்திஷ்டமான ஹிதம் ஸாதிக்கப்படும்?' என்று கேட்டால், அடியேனுக்குத் தோன்றுகிற ப்ரத்யுத்தரம் ஒன்றே. அதாவது:—ஸ்ரீ ஸந்நிதியின் உத்கர்ஷத்தைக் கோரும் ஶிஷ்யர்கள் தாங்கள் அடிக்கடி ஸ்ரீ ஸந்நிதிக்கு நேரில் வந்து, ஸ்ரீ அழகியசிங்கர்களிடம் க்ருத்ய அக்ருத்யங்களை விண்ணப்பஞ்செய்து, அவர்களுக்கு ப்ரமாதாதிகள் ஏற்படும் காலங்களில் யதோசிதம் ஸ்மரிப்பித்து, அப்ரமத்தர்களாக அவர்கள் ஆஶ்ரித ஸம்ரக்ஷணம் செய்து வரும் காலங்களில் தங்களுடைய க்ருதஜ்ஞதையையும் அப்படிப்பட்ட பரமோபகாரிகளிடம் தமக்கு இருக்கும் பக்தியையும் விஜ்ஞாபநஞ் செய்துகொண்டு, ஸ்ரீ ஸந்நிதிக்கு ந்யூநதாவஹமான கார்யம் ஏதாவது ஸம்பவிக்கும்போலிருந்தால் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மாநுக்ருஹீதமான தங்களுடைய பலத்தால் அதைத் தடுத்து, ஸ்ரீ ஸந்நிதிக்குப் பலாதிஶயத்தைக் கொடுக்கும் அம்ஶங்கள் ஏற்பட்டால் அவைகளைத் தங்களுடைய ஶக்தியைக்கொண்டும் ஒன்று நூறாக அபிவ்ருத்தங்களாக்கி, இம்மாதிரி ஸ்ரீ அழகியசிங்கர்களுக்கு ஓர் பெருத்த உபபலமாக ஶிஷ்யர்கள் எல்லாரும் ஆக வேண்டும் என்பதுதான். இம்மாதிரியான கைங்கர்யத்தை ஶிஷ்யர்கள் ஸரிவர நடத்திக்கொண்டுவந்தால், அஸாதுவான கார்யம் ஒன்றும் நடவாது என்பதில் ஆக்ஷேபமில்லை.

ஆனால், 'இப்படி விஜ்ஞாபநம் செய்துகொள்வது ஶிஷ்யர்களுடைய தர்மமாகுமா? ஸ்ரீ அழகியசிங்கர் ஶிஷ்யர்களுக்கு ஸ்வாமியன்றோ?' என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். இதுஸம்பத்தமாக இரண்டொரு விஷயங்களை நாம் கவனிக்கவேணும். ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளும் ஸ்ரீ அழகியசிங்கர்கள் நமக்கு ஸ்வாமிகள், நாம் அவருக்குத் தாஸபூதர்கள் என்பது உண்மையே. ஸர்வ ப்ரகாரத்தாலும் ஸ்ரீ ஸ்வாமியை ஸர்வவித ப்ரதிபத்தியுடனும் நாம் ஆஶ்ரயிக்கவேண்டியது யதார்த்தமே. ஆனால், இந்தத் தாஸ்யம் கேவலம் ஸ்தாநாதீநமன்று; "குணைர்தாஸ்யமுபாகத:" என்று குணாதீநமென்பதை நாம் ஒருபொழுதும் மறக்கக்கூடாது. ஆஸ்தாநத்திலும் தத்ஸம்பத்தமான அதிகாரத்திலும் ஓர் ஆஸ்தா விஶேஷத்தால், உபாயங்களின் ஸாத்வஸாது பாவத்தை விசாரியாமலே ஒரு ஸ்வாமீ ஆஸ்தாநத்தை ஆக்ரமித்து ஸ்ரீ அழகியசிங்கராக எழுந்தருளிவிடும் பக்ஷத்தில், அவர்விஷயத்திலே நாம் எவ்

விதமான ப்ரதிபத்தியைச் செய்யக்கூடும்? பலாம்ஶத்தில் ஒரு வ்யாபாரம் ஸித்தாந்தாபிவ்ருத்தியின் பொருட்டு ஆகிறது என்கிற காரணத்தைக்கொண்டு, வஸ்து ஸ்தித்யபலாபத்தையும் அந்தஃகரணத்திற்கு விருத்தமான ப்ரவ்ருத்தியையும் ஒருவர் செய்ய ஆரம்பித்தால், அவரிடம் நாம் எப்படி விஶ்வஸிக்கக்கூடும்? 'ஆபத்தஶையை அடைந்துவிட்டோம்' என்கிற வ்யாஜத்தைக் கொண்டு ஆஶ்ரமத்திற்கு அநநுகுணமான கர்மாக்களைச் செய்யவும், 'நாம் அதிகாரத்தில் இருக்கிறோம்; நம்முடைய கோஷ்டியும் பலிஷ்டமாக இருக்கிறது' என்கிற தைர்யத்தைக்கொண்டு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மனுடைய சொத்துக்களை அந்யதா விநியோகிக்கவும் இன்னும் மற்ற க்ரமவிரோதங்களைச் செய்யவும் ஒருவர் துணிந்துவிட்டால், அவரைப்பற்றி ஶிஷ்யர்களுக்கு எப்படி தாஸ்யபுத்தி ஜனிக்கும்? "ஸிஜ்ஞஂவஸ்ஸஂவஜஸாயெ" என்கிறபடி ஸதாசார்யனுக்கு உரிய கல்யாணகுணம் ஒருவரிடம் நிறைந்திருந்தாலன்றோ, அவர் நமக்கு ஸ்வாமியாவார்; நாம் அவருக்கு தாஸர்கள் ஆவோம்? குணபூர்த்தி இல்லாதவிடத்தில் ஸ்வாமிதாஸ ஸம்பந்தத்தைக் கொண்டாடுவது மௌட்ய பரீவாஹமேதவிர ஜ்ஞாந ஜந்ய கார்யமாகாது.

மேலும், ஸ்ரீ ஸ்வாமீ ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளி விட்ட மாத்திரத்தில் அப்ராக்ருத ஶக்தி அவரிடம் ஏற்பட்டுவிடவில்லை. ப்ரக்ருதி ஸம்பந்தம் ஒட்டிக்கொண்டிருக்கும் வரையில் ஜ்ஞாநத்திற்குத் திரோதாநாதிகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். வைராக்யாதிகளால் மிகவுஞ் சிறந்தவராக இருந்தாலும், "ஸாஶயெ க்வாஂ" என்கிற ரீதியாகச் சிலஸமயங்களில் ஸ்மரிப்பிக்கும் ஸ்திதி அவருக்கும் உண்டு. கல்யாணகுண ஸம்பத்தால் அபரதேஶிகனைப் போல எழுந்தருளியிருந்த மஹான்களின் காலங்களிற்கூட ஶிஷ்யர்கள் ஸ்மரிப்பிக்கிறது என்றும், அவர்களுடைய யுக்தி யுக்தமான விஜ்ஞாபநத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் திருவுள்ளம்பற்றுகிறது என்றும் இத்யாதியான பரிபாடி நடைபெற்று வந்திருக்கிறது. ஆகையால், தாஸர்களாக இருக்கும் நாம் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் க்ருத்ய அக்ருத்யங்களைப்பற்றி ஸ்மரிப்பிக்கிறதும், ஸ்ரீ ஸ்வாமிகளாக எழுந்தருளியிருக்கும் அந்த ஆசார்யர்கள் நம்முடைய விஜ்ஞாபநங்களை ஸதஸத்விவேகம்செய்து அங்கீகரிப்பதும் அநுபபந்நங்களல்ல.

ஆனால், அவ்யவஸ்திதமாக யார் வேணுமானாலும் விஜ்ஞாபநங்களைச் செய்து கொள்ளலாமென்றாவது, அல்லது யத்ருச்சை

யாக யார் அந்தந்தக் காலங்களில் ஸ்ரீ ஸ்வாமியின் ஸமீபத்தில் இருக்கும்படியாக நேர்கிறதோ அவர் மாத்திரம் விஜ்ஞாபனங்களைச் செய்துகொள்ளுகிறது என்ருவது ஒரு மார்க்கம் எற்பட்டு விட்டால், கார்ய நிர்வாஹம் துஸ்ஸாத்ய மானாலும் ஆகலாம்; அல்லது விபரீதமாகப் பர்யவஸித்தாலும் பர்யவஸிக்கலாம். அநேக ஸமயங்களில் இம்மாதிரியான ரீதியால் தோஷங்கள் ஸம்பவித்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். சிலஸமயங்களில், ஸாத்விககுணம் கொண்ட மஹான்கள், ஸ்ரீ ஸ்வாமிகளின் அந்தரங்க விச்வாஸத்திற்குப் பாத்ரராகி ஸ்ரீ ஸந்நிதிக்கு ஏராளமான ஆநுகூல்யத்தைச் செய்து வைத்திருக்கிறார்கள். அவ்விதமான ஸாதுக்கள் ஸதா நேர்வதை நாம் எப்படி நம்பியிருக்கலாம்! லோகாநுபவத்தைப் பார்த்தால், யத்ருச்சையாக நன்மை நேர்வதை விட யத்ருச்சையாகத் தீமை நேர்வதே அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகையால், ஸ்வாமிகளிடத்தில் ஶிஷ்யர்கள் விஜ்ஞாபநம்செய்துகொள்ளுகிறது என்கிற இந்த மார்க்கத்திற்குச் சில நியமங்களைக் கொடுத்து, அதற்கு ஒரு ஸ்வரூபத்தை உண்டுபண்ணுவது நலமாகும். அந்த ஸ்வரூபம் எப்படிப் பட்டதாக இருக்கவேண்டும் என்பதை நிர்ணயிக்க அடியேன் ஶக்தனல்லேன். ஆனாலும், பின்வருமாறு ஒரு சாயையை அது அநுஸரித்திருக்கலாம் என்று சொல்லத் துணிகிறேன்.

ஸ்ரீ ஸந்நிதியைச் சேர்ந்த ஶிஷ்யர்கள் எல்லாரும் ஒருவர் விடாமல் தங்கள் பெயரை ஒரு புஸ்தகத்தில் தாக்கல் செய்து, அப்படி தாக்கல் செய்யப்பட்ட பெயர்கள் அடங்கிய ஒரு ஸதஸ்ஸை ஏற்படுத்தி அதற்கு ராஜாங்கீகாரத்தை ஸம்பாதிக்கவேண்டியது என்றும், பலவிடங்களிலிருக்கும் இந்த ஸதஸ்யர்கள் ஒன்று சேர்ந்து ஆலோசனைகளைச் செய்வது துஸ்ஸாத்யமாதலால், இவர்களால் நியமிக்கப்படும் பெயர் ஐம்பது, இவர்களிலிருந்து ஸ்ரீ ஸ்வாமியால் நியமிக்கப்படும் பெயர் ஐம்பது, ஆக நூறு பெயர்கள் அடங்கிய ஒரு கமிட்டி கார்ய நிர்வாஹார்த்தம் ஏற்படுத்தப்படவேண்டியது என்றும், இந்தக் கமிட்டி அங்கத்தினர்களாக இருப்பதற்குக் கேவலம் தநிகதையையாவது உயர்ந்த பதவியில் இருப்பதையாவது அர்ஹதையாகச் செய்யாமல் ஜ்ஞாநாநுஷ்டாநஸம்பத்தையும் ஒரு யோக்யதையாகப் பாவிக்க வேண்டியது என்றும், இப்படி உண்டாக்கப்படும் கமிட்டி உத்திஷ்டமான ஒரு

காலாவதிவரையில் இருந்து பிறகு அவர்களைக் கொண்டாவது மற்றவர்களைக்கொண்டாவது முற்கூறியபடி மற்றொரு கமிட்டியை ஏற்படுத்துகிறது என்றும், இந்தக் கமிட்டிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் அத்யக்ஷராக எழுந்தருளியிருந்து கமிட்டி அங்கத்தினர்களோடு கலந்து ஸகல காரியங்களையும் கடாக்ஷித்துவரவேண்டுமென்றும், ஸ்ரீ அழகியசிங்கருடைய நியமநத்தின்பேரில் வ்யவஸ்தித மான திநங்களில் இந்தக்கமிட்டியார் ஸங்கம் சேர்ந்து ஸ்ரீ ஸந்நிதி விஷயகமான ஆலோசனைகளைச் செய்து ஸ்ரீ அழகிய சிங்கரிடம் தங்களுடைய அபிப்ராயங்களை நிவேதநம் செய்துகொள்ளவேண்டுமென்றும், இத்யாதியான வ்யவஸ்தை ஏற்படுத்தினால் விசேஷித்த ஆநுகூல்யம் ஸித்திக்கும் என்று அடியேனுடைய புத்தியில் தோன்றுகிறது. ஸ்ரீ ஸ்வாமிக்கு மிகுந்த ஸ்வாதந்த்ர்ய ஹாநியின்றிக்கே இந்த வ்யவஸ்தையை ஏற்படுத்தக்கூடும். கமிட்டியாருடைய ஆலோசனை யன்றிக்கே சில விஷயங்களில் ஸ்ரீ ஸ்வாமி ப்ரவ்ருத்திக்கவும், நியமநங்களைச் செலுத்தவும் ஸாத்யமாகும்படி சில நிர்ணயங்களைச் செய்துகொள்ளலாம். கமிட்டியார் செய்து கொள்ளும் விஜ்ஞாபநங்களை யெல்லாம் ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளம் பற்றியே தீரவேணும் என்கிற நிர்ப்பந்தம் ஒன்றும் வேண்டுவதில்லை. அந்த விஜ்ஞாபநங்களில் பலீயஸ்ஸான அநுபபத்திகள் இருந்தால் அந்த அநுபபத்திகளை எடுத்து ஸ்ரீமுக ரூபமாகக் கமிட்டியாருக்கு நியமிக்க ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸர்வவித ஸ்வாதந்த்ர்யமே உண்டு. ப்ராக்ருத காலத்தை அநுஸரித்து, ஸ்ரீ ஸந்நிதியின் ஆய வ்யயங்களின் கணக்கை ஆதுநிகரீதியின்படி வைத்துக் கொள்வதும், ப்ரதி ஸம்வத்ஸரமும் கணக்கில் தேர்ந்த ஒருவரைக்கொண்டு ஸம்வத்ஸராந்தக் கணக்கைப் பரிசீலநம் செய்துவைத்து அப்படிப் பரிசீலிக்கப்பட்ட கணக்கின் ஸங்க்ரஹத்தை ஸ்ரீ ஸந்நிதியில் நடந்திருக்கும் ஸாம்வத்ஸரிக விசேஷங்கள் அடங்கிய ஒரு ஸ்ரீமுகத்துடன் சிஷ்யர்கள் எல்லாரும் ஸேவித்துக்கொள்ளும்படி ப்ரசுரிப்பதும், ஸ்ரீ ஸ்வாமியின் ஸ்வாதந்த்ர்ய பங்கத்திற்குக் காரணங்கள் ஆகா; ப்ரத்யுத மிகவும் சோபாவஹங்களாகவே இருக்கும். ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு வார்த்தகத்தால் அபாடவம் ஜநித்துப் புத்திக்கு மாலிந்யம் உண்டாகும் காலங்களில், தமக்குப்பிறகு ஆஸ்தாநத்திற்கு எழுந்தருள வேண்டிய ஸ்வாமியை நியமிக்கும் காலங்களில் இந்தக்

கமிட்டியாருடைய ஸஹாயம் மிகவும் உபகாரகமாகவே இருக்கும். இப்பொழுது ஸ்ரீ ஸந்நிதியையும் அதை ஆஶ்ரயித்து நிற்கும் ஶிஷ்யர்களையும் க்ரஸித்து விடும்போலிருக்கும் விபத்து நிவாரணமாக வேண்டுமானல், கீழ்க்கூறிய சாயையை அநுஸரித்து ஏதாவது ஒரு வ்யவஸ்தை சீக்கிரத்தில் செய்யவேண்டுவது அவஶ்யமே.

'இந்த ஆலோசனை உசிதமாகவே இருக்கிறது; ஆனால்,இதை ஸாதித்துக்கொள்ளும் மார்க்கம் யாது?' என்கிற ப்ரஶ்நம் ஜநிக்கலாம். இதற்கு உத்தரமாகப் பலபெயர் பலவித உபாயங்களைச் சொல்வார்கள். அடியேனுக்குத் தோன்றுகிறதாவது - நமக்கெல்லாம் உபேய வஸ்துவாக இருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரே இதற்கு உபாயம் என்பது தான். இப்பொழுது கிஞ்சித் உதாஸீநர்களாக இருக்கும் ஶிஷ்யர்கள் எல்லாரையும் ஒன்று சேர்த்து, நம்முடைய மநோரதம் என்னவென்பதை அவர்களுக்குப் போதித்து, 'அநவேக்ஷிதமாக விட்டுவிட்டால் ஸ்ரீமடம் ஶாந்தமாகிவிடும் போல இருக்கிறது' என்பதையும் எடுத்துச்சொல்லி, இந்த ப்ரயத்நத்தில் அபசாராவஹமான அம்ஶம் ஒன்றுமில்லை என்பதையும் விவரித்து, இவ்விதமான உத்போதநத்தால் தெளிந்த புத்தியுடன்கூடிய ஶிஷ்யர்கள் எல்லாருடனும் நாம் எல்லாரும் ஸமவேதர்களாக ஸ்ரீ ஸந்நிதிக்கு விடைகொண்டு, ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடிகளைப் பிடித்து இந்த ஆலோசனையின் ஸாதுபாவத்தை அவருடைய திருவுள்ளத்தில் வற்புறுத்தி விண்ணப்பித்து அவரைக் கொண்டு இதை ஸாதித்துக்கொள்வதே உசிததமமான மார்க்கம். ஸ்ரீ ஸ்வாமி கடாக்ஷித்து இந்தச் சீர்திருத்தத்தைச் செய்ய யத்தனித்தால், ஒரு க்ஷணத்தில் முழுவதும் ஸாதிதமாகிவிடும்; அவருடைய கடாக்ஷமன்றிக்கே நாம் இதர பலங்களைக் கொண்டு ஸாதிக்க முயல்வது அதிமாத்ரம் ஶ்ரமாவஹமாக இருக்கும். தவிரவும், பெருத்த ஔதார்யமும் பரார்த்தைக ப்ரவணதையும் பொருந்தியிருக்கும் ஸ்ரீ ஸ்வாமி என்ன காரணத்தால் நம்முடைய விஜ்ஞாபநத்தை நிராகரிக்கக்கூடும்? "விஹாவடிும்யம் வூாவ) வ)த

நாத விதந்வந் ப்ரஜஹாவாம் ஸ்வதந்த்ரோ யோ யந்நமஸ்ய:
ஸ்வயஞ்ஜநி ஸந்ததஸ்ய ஹஜதாம் - ப்ரதிஜ்ஞாம் ஸ்வாஞ்ஜக்ஷ ஸ்வ
உதபிநீ ஸந்நா ஸமே'' விஹா ஸ்தஸ்யவாயம் ப்ரதிநியி
ஸிதீஷம் கிநா ஸ்ரேஷா ॥

இம்மாதிரியான நோக்கங்களைத் தமது மநஸ்ஸில் வைத்துக் கொண்டே, சில ஆஸ்திகர்கள், ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை என்னும் ஒரு ஸபையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்களை ஒன்றுசேர்க்கவும், அவர்களுக்கு வஸ்து ஸ்திதியை உள்ளபடி தெரிவிக்கவும், மூன்று ஸம்வத்ஸர காலமாக அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் பரிஶ்ரமம் இவ்வளவு என்று சொல்லி முடியாது. அர்த்தவிஷயமாகவும் தேஹ ஶ்ரம விஷயமாகவும் அவர்கள் கொஞ்சமேனும் ஸங்கோசிக்கவில்லை. மூன்று வருஷமாக அவர்கள் நடத்திவரும் வருஷாந்த மஹா ஸங்கமும், ப்ரதிமாஸம் அவர்கள் ப்ரசுரித்துவரும் ஸ்ரீ வேதாந்ததீபிகை என்னும் பத்ரிகையுமே, அதற்கு நிதர்ஶநங்கள். ஆனால், 'இந்த மாதிரியான ஸங்கங்களாலும் இந்தப் பத்ரிகையாலும் அவர்கள் என்ன ஸாதித்து விட்டார்கள்?' என்று கேட்கலாம். யதார்த்தமாகவே சிலர், 'இந்த ஸபை என்ன கார்யத்தை ஸாதித்து விட்டது? மூன்று வருஷமாக ஶ்ரமப்பட்டும் இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியை அபிமுகராகச் செய்துகொள்ள ஸாத்யப்படவில்லையே!' என்று இத்யாதியாக அநுவதிக்கக்கூட அநர்ஹங்களான வாக்யங்களைச் சொல்லி ஸ்ரீ ஸபையை நிந்திக்கிறார்கள். ஸ்ரீ ஸ்வாமியினிடத்தில் அந்த மாதிரியாக அபசாரப்படுவது இந்த ஸபைக்கு நோக்கமாக இருந்தால், ஸபையின் ப்ரயத்நம் விதநமாகிவிட்டது என்றே சொல்ல வேணும். அப்படிப்பட்ட அஸப்ய மார்க்கத்தில் ஸப்யர்கள் ப்ரவேஶிப்பதாக ஸ்வப்நத்திலும் சிந்தித்ததில்லை. குடும்ப கார்ய வ்யக்ரதையால் கிஞ்சித் உதாஸீநர்களாக இருக்கும் ஶிஷ்யர்களை ப்ரபோதித்து, ஸ்ரீ ஸந்நிதி விஷயங்களில் ஒரு ஶ்ரத்தையை அவர்கள் எடுத்துக்கொள்ளும்படி செய்யவும், கீழ்ச்சொல்

வியிருக்கிறபடி ஸ்ரீ ஸந்நிதியின் ஸ்திதியை அவர்களுடைய மநஸ்ஸில் தெளிய விளக்கவும், அதனால் ஶுத்தியை அடைந்த மநஸ்ஸை யுடைய ஶிஷ்யர்களைச் சேர்த்துக்கொண்டு ஸ்ரீ ஸ்வாமியிடம் போய் அவரது திருவடிகளை அவலம்பித்து ஸமவேதர்களாக அவருடைய மநஸ் இளகும்படி கதறவுமன்றோ, இந்த ஸப்யர்களுடைய ப்ரயத்நம்? அது பெரும்பாலும் நிஷ்பந்நமாகி யிருக்கிறது என்பதில் கொஞ்சமேனும் ஸந்தேஹமில்லை. ஸ்ரீ ஸந்நிதி விஷயத்தில் ஶ்ரத்தாளுக்களாக இருக்கும் ஶிஷ்யர்கள் முன்னிருந்ததைக் காட்டிலும் இப்பொழுது எவ்வளவோ மடங்கு வ்ருத்தியாகி யிருக்கிறார்கள். இந்த வ்ருத்தியின் ஹேதுவில் ஶிஷ்ய ஸபைக்கு ஏதாவது ஸ்வல்ப பாகம் இருந்தாலும் ஸபை க்ருதார்த்தமென்று சொல்வதில் யாதுதான் ஆக்ஷேபம்?

ஆனால், 'இந்த உபாயத்தால் பலத்தை அந்வேஷிப்பது சிரகால ஸாத்யமாச்சுதே' என்கிற பீதி ஒன்று உண்டு. அது ஸகாரணமான பீதிதான். ஆனால், பஹுகாலமாக வ்ருத்தியாகி யிருக்கும் நோய்க்கு க்ஷணகாலத்தில் ப்ரதீகாரத்தைத் தேடுவதுதான் ஸபலமாகுமா?

"𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑍇𑌷𑌾 𑌮𑌮 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑍍𑌹𑌿𑌤𑌮𑌨𑍍𑌯𑍁𑌵𑌿𑌜𑍍𑌞𑌤𑌾𑌂 ।
𑌕𑌨𑍍𑌯𑌾 𑌮𑌯𑍍𑌯𑍁𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌾 𑌹𑌿 𑌵𑌿𑌮𑍂𑌰𑍍𑌛𑌾𑌹𑍍𑌯𑌪𑌿𑌕𑍋𑌪𑌯𑌾"

𑌶𑍍𑌰𑍀 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

458

ஸ்ரீ:

# ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம்.

(தொடர்ச்சி.)

ஈஶ்வரத்வித்வம் என்னும் தோஷம் வராதென்பதற்கு ‘பத்நீ’ என்னும் நிர்த்தேசம் எப்படிப் பரிஹாரமென்றால், இங்கே யாகங்களிலும் லோகத்திலும் பத்நீ பதியுடன் சேர்ந்து எல்லா வ்யாபாரங்களையும் செய்தாலும், பதிக்கு ப்ராதாந்யம் ப்ரஸித்தமாயிருப்பது அநுபவஸித்தம். பத்நியுடன் சேர்ந்திருந்தாலும் யஜமாநன் ஒருவரே. அதுபோலப் பகவான் தன்னைப்போல விபுவாய் உபய விபூதிக்கும் சேஷியாய் ஸர்வாவஸ்தையிலும் அந்வயித்தவளாய் எப்போதும் விட்டுப் பிரியாதவளுமான ஸ்ரீ யுடன் சேர்ந்து எந்த ஸ்ருஷ்டியாதி வ்யாபாரங்களைச் செய்தாலும் அவருக்கு ப்ராதாந்யம் ஏற்பட்டிருப்பதால் பத்நியுடன் சேர்ந்த அவரை ஈஶ்வரனுச் சொல்வதில் ஈஶ்வரன் இரண்டென்று சொன்னதாய் ஆகாதென்று கருத்து. இதை உத்தேசித்துத்தான் ‘உபயாதிஷ்டாநம் சைகம் ஶேஷித்வம்’ ‘ஸஹதர்மசாரிணீ’ என்பது முதலான ப்ரமாணவாக்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த விஷயத்தில் வேறொரு வைதிகமான உதாஹரணமும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது யாகப்ரகரணங்களில் சில யாகங்களுக்குச் சேர்ந்த இரண்டு தேவதைகள் உத்தேச்ய தைவமாக விதிக்கப்படுகின்றன. சிலவிடங்களில் அக்நியும் ஸோமனும், சிலவிடங்களில் அக்நியும் விஷ்ணுவும், சிலவிடங்களில் அக்கிநியும் இந்த்ரனும் இது போன்றமற்ற தேவதா த்வந்த்வங்களும் ஒரு தேவதையாய் ஆவாஹநாதிகள் செய்யப்பட்டு ஹவிர்ப்பாகம் பெறுகின்றன். இது “தேவதா த்வந்த்வ ஹவிர் ந்யாயம்” என்று குறிப்பிக்கப் பட்டிருக்கிறது. இந்த ந்யாயத்தாலும் ஸ்ரீயும் பகவானும் பின்னர் களாயிருந்தாலும் ஈஶ்வரத்வித்வத்துக்கு இடமில்லை.

இதை ஸ்தோத்ரத்தில் ஆசார்யரும் "உதீசீம் ஜநநி ஹஜதோ ரமாஸ்லிஷ்டோ வாயிமாயம்" என்கிற ஸ்ரீஸ்துதிஸ்லோகத்திலும் "ஏகோஹம் ரக்ஷா விஷ்ணுவ்யூஹ திஷ்ட" என்கிற ந்யாஸதிலகஸ்லோகத்திலும் மற்றும் பலக்ரந்தங்களிலும் உபபாதித்திருக்கிறார். 'ஸ்வாமேவாஹு: ஸ்திவிஷ்வபரே ஸ்வதீ வ்யம் லோகநாயம்' என்கிற ஸ்ரீஸ்துதி ஸ்லோகத்திலும் ஸ்ரீ நிகமாந்த தேசிகன், அபேத பக்ஷத்தையும் ஜீவபக்ஷத்தையும் அநீஸ்வரத்வபக்ஷத்தையும் அவலம்பிக்கிறவர்களை 'கிம்வி உத்தீயதோ ஹா:' என்று நிந்தித்து 'ஸ்வாமாஸ்ஷ ஷவதி யாவாம் தெய்வதம் ஷம்வதீந:' என்று உபயநிஷ்ட ஈஸ்வரத்வபக்ஷத்தை ஸ்வாபிப்ராயமாக நிர்த்தேசிக்கிறார். ஆசார்யர்கள் ஸ்தோத்ரங்களில் சில விடங்களில் அத்யுக்திகள் செய்வது வழக்கமானாலும் இந்த இடத்தில் அத்யுக்தி ஒன்றுமில்லையென்று சொல்லவேணும். இதற்கு ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனுடைய இதரக்ரந்தங்களும் ப்ரமாணங்கள். லக்ஷ்மீ விஸிஷ்டனான பகவானே ப்ராப்யனும் உபாயமாகவு மிருப்பதால் ப்ராப்யத்வித்வ மாவது உபாயத்வித்வமாவது ஸம்பவிக்காதென்னுமிடம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸித்தோபாயஸோதநாதிகாரத்திலும் மற்ற விடங்களிலும் கண்டு கொள்வது. இந்த ஸஹஸேஷித்வ நிபந்தநமான ஸஹத்வத்தை யுத்தேசித்தே "எம்பெருமானைச் சொன்னவிடத்தில் பிராட்டியையும் சொல்லிற்று" மென்கிற உடையவர் வார்த்தையும், "தவஹோவாஸ்வாம் நவ்யய மஹியத்தே ஸ்ருதிரபி" என்கிற பட்டர்வாக்யமும் உபபந்நங்கள்.

மேலும் பதிபத்நிகளுக்குப் பலவிஷயங்களில் ஸாம்யமிருந்தாலும், பதிப்ராதாந்ய மிருப்பதுபோல், பகவானுக்கும் லக்ஷ்மிக்கும் சேஷித்வாதிகளில் ஸாம்யமிருந்தும் குணங்களில் தாரதம்யம் சில அம்சங்களில் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அதாவது பகவானுக்கு தண்டதரத்வம், பராக்ரமம், ஸ்தைர்யம் முதலான குணங்களும், பிராட்டிக்கு பதிபாரதந்த்ரியம், மார்த்தவம் வாத்ஸல்யம் முதலான குணங்களும் ப்ரதிநியதங்கள். இதைப் பட்டர்,

யாவக்வாஜள தாஜ்யேஷ்ட்ய வாரவஶதா ஶக்ராஶமேந
ஸ்ரீரங்காதீஶ ஸ்யாத்வா ஸம்பவதி கராணாம் வாம்ஸ்வஸாஹாஜ ॥
க்வயி ஸ்ரீ ஶ்ரேவகாஜாம் ப்ருதிவேதி வாராயஜ்ஜகாராணா
கடாக்ஷா நாஹோக்தாம் ஸம்பவதி யாவயொ ராதஶநி ஸிஷா ॥

என்கிற ஶ்லோகத்தில் வெளியிட்டார். இதனால், ஸ்ரீ ஸ்ரீ சர்களுக்குச்சில பேதம் ஏற்பட்டால் அவருக்கு ஈஶ்வரத்வமும் மோக்ஷப்ரதத்வாதிகளும் சொல்வது கூடுமோ என்னில் இந்த விபாகம் உபயேச்சையால் உண்டான விபாகமென்று சொல்வதால், அந்த தோஷம் வராதென்று ஆசார்யர்கள் பரிஹரித்திருக்கிறார்கள். பிராட்டிக்குப் புருஷகாரத்வம் ஒப்புக்கொள்வதினால் பகவானுக்கு எப்படி ஶக்திலோபம் இல்லையோ அது போல் பகவதிச்சையாலும் பிராட்டியின் இச்சையாலும் சில குணங்களை தம்பதிகள் விபஜித்து அநுபவிப்பது அவர்கள் சக்திக்குறைவுக்குக் காரணமாகாதென்று தாத்பர்யம்.

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் இந்த லக்ஷ்மீவிஷயமான அணுத்வபக்ஷத்தையும், விபுத்வபக்ஷத்தில் ஜீவத்வபக்ஷத்தையும், விபுவாயிருந்தும் பரதந்த்ரமாயிருப்பதால் ஜீவனுமல்லாமல் ஈஶ்வரனுமல்லாமல் இருக்கும் பக்ஷத்தையும், ஈஶ்வரகோடியில் சேர்த்தபக்ஷத்தையும் ஆகியநான்கு பக்ஷங்களையும் விவரித்து

ப்ராமாணிகேந ஸஹைதேஷு பக்ஷேஷ்வத்ர பதாஷ்வபி ।
ஸ்வதந்த்ர பதிநித்யேச்சா ஸித்தம் ஸர்வம் ஶ்ரிய: ॥

என்கிறகாரிகையால் இந்த நான்கு பக்ஷங்களிலும் லக்ஷ்மீக்கு பதியின் நித்யேச்சையாலே மாத்ரம் ஈஶ்வரத்வம் ஒப்புக்கொள்ளப் படுகிறது என்று அநுக்ரஹித்து, இதையே

“ அத: (அத்ர) பதாபிப்ராயைதை: பத்யா வைஶ்வர்ய விப்ரம:” என்று நிகமநம் பண்ணினார். ஆகையால் இந்த 4 - பக்ஷங்களில் கடைசியான 4 - வது பக்ஷத்திலும் லக்ஷ்மீக்கு முக்யேஶ்வரத்வம் சொன்னதாய் ஏற்படவில்லை. பதியின் இச்சாதீநமான வைபவமே லக்ஷ்மீக்குச் சொன்னதாய் ஏற்படுகிறது. இந்த 4 - வது பக்ஷத்தில் லக்ஷ்மீக்கு ப்ரதாந ப்ராப்யத்வம், ஸ்ருஷ்டி

யாதிகளில் அந்வயம், இச்சைக்கு விகாதமில்லாமலிருத்தல், இவைகளெல்லாம் பதியின் இச்சையாலென்றே வ்யக்தமாகிறது. இதற்குமேல் ௫-வது ஒருபக்ஷம் "சுஸ்யா ம்ரணஹாவ உஹயெஹூா ஹூயாக்து ஐதி கெவிஶாஹா:" என்கிற வாக்யத்தினுல் சொல்லப் படுகிறது. அதில் "ஊஹயெஹூா ஹூயாக்துவ்ம்" என்பது ஒவ்வொருவருடைய ஸங்கல்பமும் இதரஸங்கல்பத்துக்கு விரோதம் வராமல் நிறைவேறுவது. இத்தால் லக்ஷ்மீக்கு முக்யமான ஈஶ்வரத்வமும், ஸர்வகார்யங்களிலும் கர்த்ருத்வத்துக்கு ஸ்வரூப யோக்யதையும் இருவர்களுடைய அவிருத்தமான இச்சையால் வ்யாபாரங்களில் விபாகமும் சொல்லப் பட்டதாயிற்று. அப்படி பரஸ்பர இச்சைகளுக்கு விகாதமில்லாமலிருப்பதையுத்தேசித்தே "சும்மீகாரிவிராஜொமெகெ:" என்றும் "தவிம்மித வராயினொ வியதெ்தூஸவிஷம்" எறும் ஆசார்யர்கள் ஸ்தோத்ரம் செய்தார்கள். இந்தப் பக்ஷத்தில் பகவானுக்கும் பிராட்டிக்கும் எல்லா அம்சங்களிலும் பரமஸாம்யம் சொல்லபட்டபோதிலும் உபயேச்சா ப்ரயுக்தமாய் சில வ்யாபாரங்களில் மாத்ரம் விபாகம் ஒப்புக் கொள்ளப் படவேண்டு மென்று சொல்லப்பட்டது.

யத்ஙிம்வி உவிவெஷஷூம் யஶிநாரொதூநெஷ்யெதெ ।
தயொஶெஹூஹ வூவஹூாஸவி நஸிஜெ்யூ தூவஹுஸநூதா ॥

என்பதனுல், சிலபேதங்கள் இருப்பது முக்யேச்வரத்வத்துக்குப்பாதகமாக மாட்டாதென்று அனுக்ரஹிக்கப் பட்டது. ஆக இந்த ஐந்து பக்ஷங்களையும் சொல்லி ஸ்ரீ நிகமாந்ததேசிகன்,

ஷம்வஙெ்ஷெதெஷ வக்ஷெஷ சுஸூிஶெக: ஹூரொணவாநு ।
ஸமக்ஷுீகஸூ ஸாரோஜூம் ஸவஹுயா ஸாஹூதிஷூிதம் ।
ஐமெஹவம் கூவிஶம்ஶெ தா ஸம்ஶயெவி விவஶுிதாம் ।
உவயாக்தூாம் ஶமெவெஶஷூா ஶாவாய ஹமஸம்ஹவ: ॥

என்று ப்ரகரணத்தை முடிக்கிருர்.

இதன் தாத்பர்யம், "மேற்சொன்ன ஐந்து பக்ஷங்களில் ஏதோ ஒன்று ப்ரமாணங்களுக்கு அநுகுணமானது. அதினுல் லக்ஷ்மீ விசிஷ்டனுன பகவானே ஸர்வேச்வரன் என்பது ஸித்தமாய்

ஏற்படுகிறது. மேல்விவரித்த விவாதங்களினால் சிலபாகங்களில் ஸந்தேஹமுண்டானாலும், முக்யமான அர்த்தத்தில் ஸம்சயத்துக்கு இடமில்லையாதலால், அவரவர்கள் உசிதமான உபாயத்தை அநுஷ்டித்துப் பலத்தையடைய யாதொரு விரோதமுமில்லை” என்பது தான்.

இந்தக் காரிகைகளினால், ஆசார்யன் திருவுள்ளத்தில் ஐந்து பக்ஷங்களும் ஸமானம் என்றுவது, அவைகளில் விசேஷநிர்ணயம் வேண்டாமென்றுவது இருந்ததாகத் தோன்றவில்லை. விஷயம் துரூஹமானதாலும் இது ஸம்பந்தமான விவாதங்கள் புத்திக்குச் சலநத்தை உண்டுபண்ணுமானதினாலும் இந்தப் பக்ஷங்களில் ஒன்றிலும் விசேஷ நிர்ப்பந்தம் வேண்டாமென்றே ஆசார்யன் திருவுள்ளம். ‘க்ஷுத்ரேதரஃ ப்ரமாணவாந்’ என்று இங்கே கூடார்த்தமாய் ஸாதித்தது இதரக்ரந்தங்களிலே தன் அபிப்ராயம் வ்யக்தமாயிருப்பதைக்கொண்டு இங்கு விசேஷ நிர்த்தாரணம் வேண்டாமென்றபடி. அபிப்ராய பேதங்களினால் வரும் காலுஷ்யங்கள் எப்போதும் ப்ரஸித்தம். ஆகையால் இந்த விஷயத்தில் ஸ்ரீ நிகமாந்த தேசிகன் வசநங்களையே ஸ்மரிப்பித்து இந்த வ்யாக்யாநம் முடிக்கப்படுகிறது.

“இறைநிலையுணர் வரிதென்று ஆழ்வாரருளிச் செய்த நிலத்திலே ஏதேனுமொரு வ்ருதாநிர்ப்பந்த மாகாது. “க்ருபாஸாரம் யத்ர ஸ்துதத்கேலி உபஸாரம் ஸ்துக்ருத்வைதே” என்கிறபடியே தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச்செய்தேயிறே நாம் ப்ரமாணசரணராய்ப் போருகிறது. ஆகையால் இவ்வீஸ்வர தத்வத்தையும் ஸம்ஶிதவ்ரதங்களையும் யதாவஸ்தாநம் தெளிய ப்ராப்தம்”

---

இத்தம் ஶ்ரீநிகமாந்தார்ய பாஷ்யபாவாநுயாயிநா ।
விஶிஷ்டாத்வைதவேதாந்த விவ்ருதா யாமுநேய ஸூக்திபி: ॥
ஸாமாந்ய ஶ்ரீநிவாஸேந ஶக்திபி: ஸ்வீக்ருதா இஹ ।
வ்யாவ்ருதா வாணீவ பாஷா தநோது ஸதாம் முதம் ॥

ஶுபமஸ்து.

---

463

ஸ்ரீ:

# பத்ராதிபரின் குறிப்புகள்.

---

ராஜ ப்ரதிநிதியவர்களின் தேஹஸ்திதி.

சென்ற ஜனவரிமீ 27உ திங்கட்கிழமைதினம் இந்தியாவின் சட்ட நிர்மாண மஹாஸபை புதுப்ரதான நகரியான டில்லியில் முதல் முதல் கூடிற்று. அந்த ஆரம்போத்ஸவத்துக்கு ராஜப்ரதிநிதி லார்ட் ஹார்டிஞ்சு அவர்கள் விஜயம்செய்து அக்ராஸநம் வஹித்தார். பகவான் அநுக்ரஹத்தால் அவருக்கு இவ்வளவுவரையில் ஶரீரம் அனுகூலப்பட்டு இந்த சுபதினத்தில் நேரில் வரக்கூடியதா யிருந்ததைப்பற்றி இந்த தேசத்தில் அனைவரும் ஸந்தோஷமடைந்தார்களென்பதில் ஸந்தேஹமில்லை. ராஜப்ரதிநிதியவர்கள் தன் ச்ரமத்தைப் பாராட்டாமலும், இன்னமும் ஆராத சில வ்ரணங்களிருந்தும், ஓர் கை இன்னும் தூக்கி சிகித்ஸகர்களால் கட்டப்பட்டிருந்தும், இவைகளை யெல்லாம் கவனிக்காமலும் ப்ரஜைகளிடத்தில் ப்ரேமபாரவச்யத்தால் அந்த ஸபையின் ஆரம்பத்தில் எல்லோர்க்கும் ஹ்ருதயாவர்ஜகமாயும் அவர் குணபூர்த்திக்குப் பர்யாப்தமான நிதர்சனமாயுமுள்ள சில வார்த்தைகளைச் சொன்னார். அதாவது, இந்தத் தேசத்து அகில ப்ரஜைகளின் நிரந்தரமான ப்ரார்த்தனைகளினாலேயே ஸர்வ சக்தியான பகவான் தனக்குச் சரீராரோக்யத்தைச்செய்து வருவதாயும், ப்ரஜைகளின் ஸமதுக்கித்வமே தன் வேதனைகளை ப்ராயேண நிவர்த்தித்து விட்டதாயும், இந்த ஸார்வத்ரிகமான ப்ரஜைகளின் விச்வாஸத்தைத் தான் மிகவும் அபிமானிப்பதாயும், தன் விஷயத்தில் அபராதியான ஸர்வஜநத்ரோஹியின் பாபத்துக்காகத் தான் ரொம்பவும் துக்கிப்பதாயும், தன்மூலமான கோபம் தனக்கு இதரப்ரஜைகள் விஷயத்தில் கொஞ்சமேனுமில்லை யென்றும், தான் ஜனங்களுடன் கலந்து ஸௌலப்யத்துடன் வர்த்திக்கவேணுமென்கிற மனோரதத்துக்கு இந்த அக்ருத்யம் இடையூறாகாதென்றும், தான் இதுவரையில் செய்துவந்த ப்ரஜாஹித ப்ரவ்ருத்திகள் ஒருகாலும் நிற்காதென்

றும், ஆனாலும் இப்படிப்பட்ட சில துஷ்டர்களால் இந்த தேசத்தாரின் ப்ரவஸித்தமான ராஜபக்தி என்னும் குணம் மலிநம்போல் ஆகிவிட்டதாயும், இந்த அநர்ஹமான அபக்யாதி நிப்சேஷமாய் விலக்கப்பட்டு இந்த தேசத்தாரின் ராஜபக்தி விஷயத்தில் ஸம்ப்ரதிபன்னமான க்யாதி ஓர் குறைவுமில்லாமல் நிர்மலமாய் விளங்க வேண்டுமென்றும், இன்னும் பல விதமான ஹிதவசனங்களைச் சொல்லி ஸபையாருக்கு நல்வரவளித்தார். அதற்கு மேல் ஸபையாரின் க்ருதஜ்ஞதையையும் ஸந்தோஷத்தையும் ப்ரமுகர்களான ஸர். ஜி. சிட்நாவிஸ் ப்ரபுவும் ஆர்ம்ஸ்ட்ராங் மஹாசயரும் எடுத்துப்பேசினர்கள். கொஞ்சகாலம் ஸமீபித்திருந்து ஸபையை உபக்ரமிப்பித்துப் பிறகு ராஜப்ரதிநிதிகள் விச்ரமிக்க வேறிடம் சென்றனர். இவ்வளவு தேஹச்ரமகாலத்தில் ராஜப்ரதிநிதியவர்கள் விஜயம் செய்து ஸபையை ஆரம்பித்த க்ருபையையும் இந்த மஹாபராதம்செய்த துஷ்டர்களுடைய பாபத்தால் இதர ஜநங்களிடத்தில் ஸௌஹார்த்தம் குறையாமலிருப்பதையும், இந்த தேசத்தின் க்ஷேமத்தில் அவர்களுக்கு இருக்கும் த்ருடமான விச்வாஸத்தையும் நினைத்தால் இந்த தேசத்துக்குப் பகவான் இதுவரையில் அநுக்ரஹித்துவந்த அனுகூலங்கள் எல்லாவற்றையும் காட்டிலும் இந்த ராஜப்ரதிநிதியை உயிர்தப்பவைத்துச் சரீரத்தை ரக்ஷித்துவரும் மஹா கருணையே மேற்பட்டதென்றும், இந்த இங்கிலீஷ் ராஜாக்களின் வசத்தில் இந்தத்தேசம் வந்ததால் உண்டான பாக்யத்தைக்காட்டிலும் இந்த ராஜப்ரதிநிதி நமக்குக் கிடைத்த மஹா பாக்யமே நமக்குப் பெரிதாய் தோன்றுகிறதென்றும் சொல்லத் தடையில்லை. அபாரகாருண்யநிதியாயும் ஸர்வ நியந்தாவுமான பகவான் சீக்ரத்தில் ராஜ ப்ரதிநிதி ஸ்வஸ்த சரீராய் ஆகிவிடும்படி க்ருபை செய்யவேணுமென்பதே ஆஸேதுஹிமாசலம், ஆபஞ்சநதகேதாரம் உள்ள ஸர்வ ப்ரஜைகளுக்கும் திவாநிசம் நிரந்தரமான ப்ரார்த்தனை.

**ஸ்ரீ அழகியசிங்கரின் அஸ்வாஸ்த்யம்.**

ராஜமன்னார் கோவிலில் ஸ்ரீ அழகிய சிங்கருக்குச் சென்ற ஜனவரி மீ 18௳ சனிக்கிழமை தினம் திடீரென்று திருமேனியில் ஒரு பார்ச்வத்தில் நோயுண்டாய் இரண்டுமூன்று தினங்கள் வரையில் எப்படி ஆகுமோவென்கிற சிந்தைக்கு ஹேதுவாயிருந்து இப்போது ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன்

அநுக்ரஹத்தால் கொஞ்சம் அநுகூலமா யிருக்கிறதென்பது இதற்கு முந்தியே எல்லோர்க்கும் பத்ரிகைகள் மூலமாய்த் தெரிந்திருக்கும். சில திங்களுக்கு முன் ஸ்ரீ அழகிய சிங்கரை நேரில் ஸேவித்துவந்தவர்கள் சொல்வதில் கொஞ்சம் ச்ரமத்துடன் எழுந்தருளியிருந்து வார்த்தைகள் ஸாதிக்க சக்தியிருக்கிறதென்றும் ஆனால் நிற்கவாவது நடக்கவாவது ஸாத்யமில்லை யென்றும் ஸமீபத்தில் ஜீவஹாநிக்கு ஹேது விருப்பதாய்த் தெரியவில்லை யென்றும் தெரியவருகிறது. இவ்வளவுதூரம் க்ருபைசெய்த பகவான் ஸ்ரீ அழகிய சிங்கருக்குத் திருமேனி இந்த ஸமயம் நன்றாய் அநுகூலமாகும்படி அநுக்ரஹிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ அழகியசிங்கரின் திருமேனியில் அஸ்வாஸ்த்யம் ஏற்பட்டவுடன் ஸ்ரீ ஸ்தாநத்துக்குத் தனக்குப்பின் யாரை எழுந்தருளப் பண்ணுகிறதென்கிற சிந்தை ஸ்ரீ அழகிய சிங்கருக்குண்டாகி சில ஸுஹ்ருத்துக்களின் ப்ரேரணையின்பேரில் ஸ்ரீ அழகிய சிங்கர் தத்காலமும் அதற்குக் கொஞ்ச நாள் முந்தியும் மடத்தில் ஸந்நிஹிதராய் எழுந்தருளி இருந்துவந்த உபயஸ்ரீ காரக்குறிச்சி அய்யுமாசார்யர் என்னும் வேங்கடக்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமியைத் தனக்குப்பிந்தி அழகிய சிங்கராய் இருக்கச் செய்கிறதென்று நிச்சயித்து இந்த நிர்ணயத்துக்கு ஆதாரமாக ஒரு உயிலையும் எழுதுவித்து அதை க்ரமப்படி ரிஜிஸ்தரும் செய்து வைத்திருக்கிறதாகத் தெரியவருகிறது.

இந்த உயிலின் முடிவில் ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமிக்குப் பிறகு திருக்கொடந்தை உப. ஸ்ரீ. சக்ரவர்த்யாசார்யர் ஆஸ்தானத்தை அடையவேண்டுமென்றும் எழுதப்பட் டிருக்கிறதாம். இந்த உயில் செய்ததற்கு முந்தியே ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமிக்கு ப்ரேஷ மந்த்ரோபதேசம் செய்துவித்து காஷாயமும் கொடுத்து, மறுநாள் தன் திருமேனியின் ஸ்திதியைப் பார்த்துக்கொண்டு ஜீவச்ராத்தம் செய்துவைப்பதாயும் பிறகு ஸமந்த்ரகமாய் காஷாய ப்ரதானம் செய்வதாகவும் ஸாதித்ததாகத் தெரியவருகிறது. பிறகு இரண்டுமூன்று

தினங்கள்வரையில் கொஞ்சம் அஸ்வஸ்தமா யிருந்த திருமேனி வ்யாழன், வெள்ளி முதற்பட்ட தினங்களில் வரவர அனுகூலத்துக்கு வந்துவிட்டபடியால் இப்போது மேல் கார்யங்கள் வேண்டாமென்றும் தனக்கு நிர்யாணகாலத்துக்குக் கொஞ்சம் முந்தித்தான் ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமிக்கு ஆஸ்தாந க்ரஹணம் ஸாங்கமாய் செய்துவைக்கப் போகிறேனென்றும் அதுவரையில் அந்த ஸ்வாமி மடத்திலேயே இருந்துவரவேண்டுமென்றும் நியமித்து இருக்கிறாராம். இந்தஸ்வாமிக்கே தனக்குப்பிந்தி ஆஸ்தாந நிர்வாஹம் ஏற்படவேண்டுமென்று ஸ்ரீ அழகிய சிங்கருக்கு த்ருடமான அத்யவஸாய மிருப்பதாய்த் தெரியவருகிறது. இப்போதே அந்த ஸ்வாமிக்கு ஆச்ரம ஸ்வீகாரம் ஏற்பட்டுவிடவேணுமென்றும் அதனல் ஸ்ரீ அழகிய சிங்கரின் ஆஜ்ஞைகளுக்கு அவர் ஜீவகாலம்வரையில் ஒரு பாதகமும் நேரிடாதென்றும் அப்படிச் செய்துவிட்டால் பலவிதமான சிஷ்யர்கள் சிந்தைகளுக்கும் விவாதங்களுக்கும் இடமிராதென்றும் ஸ்வாமி ஸந்நிதியில் பலர் விஜ்ஞாபநம்செய்து வருகிறார்கள். ஆகிலும் ஸ்ரீ அழகிய சிங்கர் அப்படிச் செய்வதை அவச்யமாக இதுவரையிலும் எண்ணவில்லை. ஏககாலத்தில் இரண்டுபேர்கள் ஆஸ்தான நியுக்தர்களாக இருப்பதில் ஸ்ரீ அழகிய சிங்கருக்குத் திருவுள்ளமில்லை போலும்.

ஸ்ரீ அழகியசிங்கர் திருமேனியில் அநாரோக்யம் என்கிற சமாசாரம் தெரிந்த உடனே ஸ்ரீ சிஷ்யஸபையின் கார்யதர்சி ஸந்நிதிக்குப்போய் தந்திகள் மூலமாயும் பத்திரிகைகள் மூலமாயும் பலப்ரமுகர்களான சிஷ்யர்களுக்கு அப்போதைக்கப்போதிருக்கும் ஸ்திதியைத் தெரிவித்துவந்தார். ஸபாத்யக்ஷரும் இன்னும் சிலஸபயின் அங்கத்தினர்களும் ஸந்நிதிக்கு வந்தார்களானலும் பலர் தங்களுக்கு வரக் கூடாததை அறிவித்துக் கார்யதர்சிக்கு தந்திகளும் கடிதங்களும் அனுப்பினர்கள். பலவிடங்களிலிருக்கும் சிஷ்யர்கள் இந்த விஷயத்தில் சிந்தாக்ராந்தர்களாய் என்னகார்யங்கள் ஸ்ரீ ஸந்திக்கு அஹிதமாய் நேருமோ என்று பயந்துகொண்டே இருப்பதாகத் தெரிகிறது. ஸபாத்யக்ஷர், கார்யதர்சிமுதலான ஸபையின்

மேலெழுதியது அச்சிட்டபிறகு, இந்த நியமந விஷயமாய் நாம் பல சிஷ்யர்களின் அபிப்ராயங்களை அறிவதில், ஸ்ரீ அழகிய சிங்கர் உயில் மூலமாயும் சிஷ்யர்கள் அபிப்ராயத்தைக் கொஞ்சமேனும் கேட்காமலும் செய்த நியமநம் இந்த ஆஸ்தாநத்தின் வழக்கத்துக்கும் யுக்தத்துக்கும் விரோதம் என்றும், அதுவிஷயத்தில் சிஷ்யர்கள் பாத்யத்தை ஸ்ரீ அழகியசிங்கர் அதிக்ரமித்தது பல சிஷ்யர்களுக்கும் அத்ருப்திகரமாயிருக்கிறதென்றும் வ்யக்தமாய்த் தெரிகிறது. ஸ்ரீ உப. சக்ரவர்த்யாசார்யருக்கு இந்த ஆஸ்தாநம் பிந்திக் கிடைக்கவேண்டுமென்று எழுதி இருப்பதும் சட்டப்படி செல்லுபடியற்றதென்றும் அத்யந்தம் அநுசிதமென்றும் எல்லோருடைய அபிப்ராயம். இந்த விஷயங்களைப்பற்றி அடுத்த ஸஞ்சிகையில் பூர்ணமாய் விசாரிப்போம்.

---

அங்கத்தினர்களும் ஸ்ரீமான் நத்தப்பட்டு ராகவாசாரியர், இஞ்சினீர் கோபாலய்யங்கார் முதலான இதர ஸந்நிதி சிஷ்யர்களும் ஸ்ரீ ஸ்வாமிக்கு அந்தரங்கராகவும் ஸ்ரீ ஸந்நிதி நல்ல ஸ்திதிக்கு வருவதில் பூர்ணவிருப்பத்துடனுமிருக்கிற கோட்டூர் சடகோப முதலியாருடன் ஸ்ரீ அழகிய சிங்கரை ஸேவித்து அவர் நியமனத்தினால் எல்லோரும் உட்கார்ந்த பிறகு, ஸ்ரீ ஸ்வாமி தாம்செய்த ஏற்பாடு சிஷ்யர்களுக்கு த்ருப்திகரமாயிருக்குமா வென்பதை சில ப்ரச்நங்களால் ஸூசித்துக்கேட்க ஸபையைச் சேர்ந்தவர்கள் ஸ்ரீ அழகியசிங்கர் இப்போது நியமித்திருக்கும் விஷயத்தைப்பற்றி ஸபையார்களால் கலந்து அபிப்ராயம் கொடுக்க ஸாவகாசப் படவில்லை என்றும், ஸ்ரீ காரக்குறிச்சி ஸ்வாமி விஷயத்தில் ஸபையார்களின் அபிப்ராயம் இனித்தான் தெரிந்து அறிவிக்கக்கூடுமென்றும் ஸவிநயமாகத் தெரிவித்தார்கள். அதற்குமேல் ஸபையாரால் நிர்த்தேசிக்கப் பட்டவர்களில் உத்தமரா யிருப்பவரைத் தாம் நியமிக்காவிட்டாலும் தன்னால் ஹிதபுத்தியால் செய்யப்பட்ட நியமனத்தை பித்ருபக்தியுள்ள புத்ரர்கள் பிதாவின் நியமனத்தை அங்கீகரிப்பது போல் அநுவர்த்திக்க வேணுமென்று ஸ்ரீ அழகியசிங்கர் நியமித்து திருமேனியில் ச்ரமத்தைக்காட்ட மேல் வார்த்தைகளுக்கு இடமில்லாமல் எல்லோரும் வெளியில் வரும்படி நேர்ந்தது.

ஸ்ரீ அழகியசிங்கர் சிஷ்யர்களை ஒருவிதமாயும் கலக்காமல் நியமநம்செய்த விஷயத்தில் பலவிடங்களிலிருக்கும் சிஷ்யர்களுக்குப் பின்ன பின்ன அபிப்ராயங்களிருப்பதாகத் தெரியவருகிறது. அந்த அபிப்ராயங்கள் வெளிக்குவரும் வரையில் நாம் இதின் யுக்தாயுக்தத்தை விசாரிக்க இஷ்டப்பட்டவில்லை. ஸ்ரீஸ்வாமியின் நியமநத்தில் தங்கள் தங்கள் அபிப்ராயங்களைச் சிஷ்யஸபையாரும் இதர சிஷ்யர்களும் சீக்ரத்தில் ஸ்ரீ அழகிய சிங்கரிடம் தெரிவிப்பார்களென்று நம்புகிறோம்.

---

470

# விளம்பரம்.

## பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தியில்லாதவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

### வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் சிவப்பு சன்னக்கம்பி பட்டைக்கரை ருத்திராக்ஷக்கரை போட்டவை கீழேகண்ட விலைகளுக்குக் கிடைக்கும்.

| நீளம் | முழம் | அகலம் | | விலை ரூபா. | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | ,, | 2½ | ,, | 6 | முதல் | 8 | வரை |
| 5 | ,, | 3 | ,, | 7 | ,, | 9 | ,, |
| 6 | ,, | 2½ | ,, | 8 | ,, | 9 | ,, |
| 6 | ,, | 3 | ,, | 9 | ,, | 12 | ,, |
| 7 | ,, | 3 | ,, | 10 | ,, | 13 | ,, |
| 8 | ,, | 3 | ,, | 12 | ,, | 15 | ,, |
| 9 | ,, | 3 | ,, | 14 | ,, | 16 | ,, |
| 10-12 | ,, | 3 | ,, | 15 | ,, | 20 | ,, |
| 15-16-18 | ,, | 2½-3, சேலைகள் | | | | | |

நயம் விலை ரூபா. 20 முதல் 30 வரை.

இந்த வேஷ்டிகள், ஜரிகைக்கரை போட்டும் கிடைக்கும். உடல் சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மேகவர்ணம், காஷாயநிறம் இன்னமும் வேண்டிய நிறங்களிலும் கிடைக்கும்.

### பீதாம்பரப் பட்டுச்சேலைகள்.

16-முழம் நீளம் 2½-அகலம் விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள் உடல் சாதா. சகல நிறங்களிலும் சேலைகள் கிடைக்கும். நயம் சேலை 1-க்கு ரூ. 30-முதல் 200-வரை. மட்டம் சேலைகள் ரூ. 20 முதல் 30-வரை. ஷை சேலைகள் உடலிலும் ஜரிகைப்பூபுட்டா போட்டது. நயம் ரூ. 35-முதல் 300-வரை. மட்டம் ரூ. 25-முதல் 30 - வரை.

### ரவிக்கைகள்.

ரவிக்கைகள் விளிம்பு முந்தி ஜரிகைவேலைசெய்ததும், உடலிலும் ஜரிகை பூக்கள்போட்டதும். ரவிக்கை 1-க்கு ரூ. 2-முதல் ரூ. 15-வரை கிடைக்கும்.

### பட்டுதுப்பட்டாக்கள்.

6-முதல் நீளம், 2½-முதல் அகலம்; விளிம்பு முந்தி ஜரிகை வேலைகளும் உடலில் ஜரிகை பூக்கள்போட்டது. மட்டம் ரூ. 7 - முதல் 15 - வரை. நயம் 15-முதல் 50 - வரை.

### காஷ்மீர் சால்வைகள்.

கம்பளி (Woollen) காஷ்மீர் சால்வைகள் 6-முழம் நீளம், 2½-அகலம். விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள், மூலையில் மாங்காய்போட்டது. மட்டம் ரூ. 9-முதல் 15-வரை. நயம் 15-முதல் 100-வரை.

சகல பட்டு பீதாம்பர காட்லாகு இனாமாக அனுப்பப்படும்.

விலாசம் :—மானேஜர்.
பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

# The Vedanta Dipika.

## IMPORTANT NOTICE.

All communications for publication, changes of address, money orders, etc., should be sent to **The Manager, The Vedanta Dipika, Kesavaperumal Sannidhi Street, Mylapore, Madras.**

**Subscribers will please note that Vol. II of the Journal closes with this issue. The first No. of Vol III will be published abont the end of February. It is hoped that all present subscribers to the Journal will continue their patronage, and also help to extend its usefulness. Subscribers are requested to send their subscriptions for Vol. III as early as possible.**

Intending advertisers are requested to apply to the Manager for terms.

---

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை பத்ரிகை.

(ஸாதாரண௵ மாசி௴ ஏற்படுத்தப்பட்டது.)

---

☞ பத்ரிகைக்கு விஷயங்கள் எழுதுவதும், கடிதங்கள் அனுப்புவதும், கட்டணம் கட்டுவதும், விலாஸமாறுதல்கள் அறிவிப்பதும், மற்றெல்லா விஷயங்களும் மானேஜர், வேதாந்ததீபிகை, கேசவப்பெருமாள் ஸந்நிதித் தெரு, மைலாப்பூர்" என்கிற விலாஸத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

இந்த 12-வது ஸஞ்சிகையுடன் 2-வது ஸம்புடம் பூர்த்தியாகிறது. மூன்றுவது ஸம்புடத்தின் முதல் ஸஞ்சிகை க்ரமப்படி அடுத்தமாஸம் வெளிவரும். இப்பொழுது சந்தாதார்களாயிருப்பவர்கள் எல்லோரும் தாங்கள் மறுவருஷத்திலும் பத்திரிகையை ஆதரித்துத் தருவிப்பதுடன், மற்றவர்களையும் இதைத்தருவிக்கச் செய்வார்கள் என்று நம்புகிறோம். மூன்றுவது வருஷச் சந்தா விளம்பமில்லாமல் அனுப்பப் படவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

**வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 2.**

# பகவத்கீதை தமிழ் மொழிபெயர்ப்பு

## இதில் அடங்கியவை.

ஸ்ரீராமாநுஜபாஷ்யம், தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகை, ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகம், தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை, தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு.

## இதுவரையிலும் மொழிபெயர்க்கப்படாதவை.

1, 2, 3, 4, 5 ஸஞ்சிகைகள் வெளியாகியிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| ராயல் 8 பாரமுள்ள ஸஞ்சிகை | 0 | 6 | 0 |
| தபால்கூலி வி. பி. சார்ஜ் உள்பட | 0 | 8 | |
| வருஷச் சந்தா (12 - ஸஞ்சிகை) | 4 | 0 | |
| தபால்கூலி உள்பட | 4 | 12 | |

சிந்தாத்ரிபேட்டை ஸத் ஸம்ப்ரதாய வர்த்த[illegible]

34 - அக்ரஹாரம்வீதி சிந்தாத்ரிபேட்டை, சென்னை.

---

ஸ்ரீ:

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்க[illegible]

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 |
| 2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது) ... ... | 0 | 2 |
| 3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் சிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 |

இவை வேண்டுமவர்கள் சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெரு[illegible] ஸந்நிதிவீதியில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழு[illegible] பெற்றுக்கொள்ளலாம்.

---

Printed for the General Secretary, A. M. S. Sabha,
by W. Pushparatha Chetty & Co., K. R. Press, Madras.